விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | தை 26 | செவ்வாய்க்கிழமை (08.02.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 51

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

## பொலநறுவையில் நேற்றிரவு பயங்கரம்

# கௌசல்யன் சுட்டுக் கொலை

### மேலும் 3 போராளிகள் உட்பட நால்வர் பலி; முன்னாள் எம்.பி. சந்திரநேரு, போராளி ஒருவர், 2 பொலிசார் உட்பட ஐவர் படுகாயம்

(மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்து பேச்சு நடத்திவிட்டு மட்டக்களப்பிற்கு திரும்பிக்கொண்டிருந்த மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் பொலநறுவை வெலிகந்தை நாமல்கம என்ற இடத்தில் வைத்து நேற்றிரவு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.



அவருடன் கூடச்சென்ற மேலும் மூன்று போராளிகள் உட்பட நான்கு பேர் சம்பவத்தில் பலியாகினர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு, இரண்டு பொலிஸ் கான்டபிள், போராளி ஒருவர் உட்பட ஐந்து பேர் படுகாயமடைந்துனர்.

(௨ ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழி பாலம் திருத்தும் பணிக்கு ஒத்துழைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப் பாலம் திருத்தும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் அதற்கு இடையூறான விதத்தில் நடந்துகொள்ள வேண்டாமென யாழ். செயலகத்திட்ட பொறியியலாளர் எம். தில்லைநாதனும் நிர்மாணத்துறை. நிர்வாகத்தினரும் பிரயாணிகளைக் கேட்டுள்ளனர்.

நாவற்குழி பாலம் திருத்தும் வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி காலநிலை மற்றும் தொழில்சார் காரணங்களினால் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருந்தது.

ஆனால் தற்போது திருத்த வேலைகள் ஒருவாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துக்கு பிரதான வீதியாக இவ் வீதி இருப்பதால் திருத்த வேலைகளை விரைவாகச் செய்துமுடிக்க வேண்டிய தேவ்வ உள்ளது.

பாலத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பாதை பெரும் சிரமங்களின் மத்தியிலேயே அமைக்கப்பட்டது. இதனால் இதனை மேலும் விஸ்தரிக்க முடியாதநிலை உள்ளது. எனவே இப்பாலத்தின் திருத்தவேலைகளை விரைவாகச் செய்து முடிப்பதற்கு பிரயாணிகளின் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை நாவற்குழிப் பாலத்தின் திருத்த வேலைகாரணமாக சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள், ஆட்டோக்கள் என்பன மட்டுமே தற்காலிக பாதையூடாகச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப் பிடத்தக்கது. (ச)

## சர்வதேச உதவிகள் அரசினால் பகிரப்படுவது சாத்தியமற்றது

### ஐரோப்பிய ஒன்றிய எம்.பி. யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றனவா? இல்லையா என்பதனை பார்வையிடுவதற்காகவே யாழ்ப்பாணத்திற்

யில் பகிர்ந்தளிக்கப்படுவது சாத்தியமற்றது.

சர்வதேச நாடுகளால் மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள், சர்வதேச தொண்டு நிறுவனங்களின் ஊடாகவே வழங்கப்பட வேண்டும் என்பதை ஐரோப்பிய ஒன்றியம்

வலியுறுத்துகிறது.

உடனடி உதவிகளைத் தொண்டு நிறுவனங்கள் ஊடாக வழங்குவது போன்று மீள்கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கு வழ[illegible]ம் உதவிகளை வெளிநாட்டு தொண்டு[illegible]

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னாபிரிக்க வெ.அமைச்சர் இலங்கை வருவார்

## இலங்கை வருவார்

(கொழும்பு)

தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் ஏபிரகாம் இலங்கைக்கான விஜயமொன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

விஜயத்தின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் பயணம் மேற்கொள்ளவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அவரது இலங்கை விஜயத்திற்கான திகதி இதுவரை அறிவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.(ச-4)

பார்வையிடுவதற்காகவே யாழ்ப்பாணத்திற்கான தனது விஜயம் அமைந்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபன் இவான்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கின்ற அவர் நேற்று யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளருக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்திற்கு ஊடாக உதவிகள் உரிய முறை

## சர்வதேச நிதி நிறுவன பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனுடன் இன்று பேச்சு

(கிளிநொச்சி)

இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களின் பிரதி நிதிகள் குழு இன்று விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

இன்று கிளிநொச்சிக்கு செல்லும் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி, ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர். இது தொடர்பான அறிவிப்பு கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வெளியிடப்பட்டது.

இச் சந்திப்பின்போது சுனாமி அனர்த்த நிவாரண உதவிகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. இதேவேளை நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தினால் இச் சந்திப்பு ஒத்திவைக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது. (ச-4)

வேண்டும் என்பதை ஐரோப்பிய ஒன்றியம் தொண்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சையை ஒகஸ்ட் மாதத்திற்கு பிற்போட கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இவ் வருடம் நடைபெறவுள்ள ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையை ஒகஸ்ட் மாதத்திற்கு ஒத்திவைக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல்லுக்கு உயர்தர மாணவர்கள் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

அக் கடிதத்தின் சுருக்கும் வருமாறு,

சுனாமியால் பாதிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இவ் ஆண்டு ஏப்ரல் மாதத்திலும், பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தோருக்கு யூன் மாதத்திலும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையை இரண்டு கட்டங்களாக நடாத்த கல்வி அமைச்சு திட்டமிட்டு வருவதாக பத்திரிகைகள் மூலம் அறியமுடிந்தது.

இவ்விதம் பாதிக்கப்பட்டோர், பாதிக்கப்படாதோர் என இரு பிரிவுகளாக பரீட்சையை நடத்துவதில் மாணவர்கள் எதிர்நோக்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சையை யூன் மாதத்தில் நடத்த தீர்மானம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையை எதிர்வரும் யூன் மாதம் நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இப் பரீட்சை யூன் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகி யூலை மாதம் முதலாம் திகதி நிறைவுபெறும். சுனாமி அனர்த்தம் காரணமாக பரீட்சை இரண்டு கட்டங்களாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தற்சமயம் அதனை யூன் மாதத்தில் ஒரேதடவையில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாதாள உலகக் கும்பல்களுக்கும் அமைச்சர்களுக்கும் தொடர்பு ?

(கொழும்பு)

சரத் அம்பேபிட்டிய கொலைச் சூத்திரதாரி நௌபரின் டயறியில் 5 சிரேஷ்ட அமைச்சர்களினதும் இரு முன்னாள் அமைச்சர்களினதும். பெயர்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

நௌபருககு உடந்தையாக செயற்பட்ட வம்பொட்டா என்றழைக்கப்பட்ட பாதாளக் குழுவினைச் சேர்ந்த அஜித் வசந்த குமார என்பவரும் கடந்த மாதம் 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர்கள் இருவரினதும் டயறிகளில் இருந்தே பொலிஸார் மேற்படி அமைச்சர்களின் பெயர்களும் தொலைபேசி இலக்கங்களும் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதன்படி அமைச்சர் அனுரா பண்டார நாயககா, மங்கள சமரவீர, மைத்திரிபால சிறிசேன போன்ற அமைச்சர்களினதும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜோன் அமரதுங்க, எம்.எச்.எம்.ம.ஃ.றூப் ஆகியோரின் பெயர்களும் தொலைபேசி இலக்கங்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

இவற்றைவிட கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் உட்பட பல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளின் பெயர்களும் இலக்கங்களும் காணப பட்டுள்ளன.

இதைவிட சரத் அம்பேபிட்டிய கொலைக்கு பயனபட்ட ஆயுதம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண சபை உறுப்பினர் நிமால் குணவர்த்தனவை கொல்லப் பயன்பட்ட ஆயுதமே என்றும் தெரியவந்துள்ளது. இவர் முன்னர் ஜனாதிபதி சந்திரிக்காவின் ஒருங்கிணைப்புச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

இவர் கொலையின் சூத்திரதாரி சஞ்சய சிறிவர்த்தன என்றும் இவர் தற்போது தலைமறைமாகி உள்ளாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அமைச்சர்களின் பெயர்கள் அடங்கிய டயறிகளை பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தனிப்பட்ட ரீதியில் பாதுகாத்துள்ளார்.

மேற்படி டயறி தொடர்பான விசாரணைகள், விபரங்களும் பொலிஸ் மா அதிபர் வசமே உள்ளன.

இதேவேளை, பொலிஸ் மா அதிபர் இவற்றை விசாரணைகளுக்குச் சமர்ப்பிக்காமல் தான் எதற்காக வைத்திருந்தார் என்றும் கேள்விகள் எழுந்துள்ளன.

மேலும் மறைந்த பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டீ.பண்டார நாயக்காவின் ஞாபகச்சின்னம் அமைந்துள்ள கொர கொல்லவில் அவரின் நினைவாக நடைபெற்ற தானம் வழங்கும் நிகழ்விற்கு பௌபர் நிதி அனுசரணை வழங்கியுள்ளான் எனத் தெரியவந்துள்ளது. (க-6,4)

## 45 ஆம் நாள் நினைவு நிகழ்வ

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வடக்கு-கிழக்கு மாகாண முனபள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் நடாத்தும் ஆழிப்பேரழிவின் கொடூர சீற்றத்தால் உயிர் நீத்த முன்பள்ளி சிறார்கள், ஆசிரியர்களுக்கான 45ம் நாள் நிகழ்வு சத்துருக்கொண்டான் சுவிஸ் தமிழ் கிராமத்தில் இன்று நடைபெறவுள்ளது.

இன்றைய தினத்தினை முன்பள்ளி கல்விசார் நினைவு நாளாகவும் அனுஷ்டிப்பதாக வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் அறிவித்துள்ளது. (க)

# விவாதத்தில் கலந்து கொள்வதா? முடிவை ஜே.வி.பி இன்று அறிவிக்கும்

(கொழும்பு)

நாளையும் நாளைமறுதினமும் நடைபெறவுள்ள ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பிலான பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொள்வது குறித்து ஜே.வி.பிக்குள் இருவேறு நிலைப்பாடுகள் தோன்றியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இதனால் இது குறித்த முடிவு இன்று அறிவிக்கப்படும் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கட்சித்தலைமையகத்தில் நடைபெற்ற நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பாக நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொள்ளாமல் விடுவதன் மூலம் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான தமது எதிர்பினை வெளிப்படுத்தவேண்டுமென ஜே.வி.பியின் ஒருபிரிவினர் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் தமக்கு வழங்கப்படும் சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி அரசாங்கச் செயற்பாடுகளை நாடாளுமன்றத்தில் விமர்சிக்கவேண்டுமென மற்றுமொரு பிரிவினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந நிலையில் இந்த விடயம் தொடர்பில் 9 உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் உயர்பீடம் இறுதிமுடிவினை இன்று அறிவக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக அரசாங்கம் தம்மை ஓரங்கட்டும் முயற்சிகளில் ஈடுபட்டுவருவதாக ஜே.வி.பி.உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துவருவதுடன் இந்த விடயத்தில் கட்சித்தலைமை தீர்க்கமான முடிவொன்றினை எடுக்கவேண்டுமென்றும் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-4)

# அத்தியாவசியப் பொருட்களை முதலில் அனுப்பிவைத்த பெருமை வவுனியாவுக்கு

(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவாக முதன் முதலில் உடன் உண்ணக்கூடிய உணவுப் பொருட்களையும் தேவைப்பட்ட மிக முக்கியமான அத்தியாவசிய பொருட்களையும் அனுப்பிவைத்த பெருமை வவுனியா மாவட்டத்திற்குரியது.

அதற்காக முன்னின்று உழைத்த பிரமுகர்களையும் தனிநபர்களையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் மிக விரைவில் கிளிநொச்சியில் நேரில் சந்தித்து நன்றி கூறவுள்ளார் என வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தைக் கேள்விபபட்டு வவுனியா மாவட்ட அனைத்து மக்களும துரிதமாகச் செயற்பட்டனர். அங்கிருந்துதான் தேவையான இரத்தம் வன்னிக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடுத்த கணமே சமைத்த உணவை முதன் முதலில அனுப்பி வைத்தவர்கள் வவுனியா மக்கள். அதனையிட்டு எங்களுடைய அமைப்பின் தலைமைப்பீடம் நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை மாவட்டத்தின் முக்கிய பிரமுகர்களுடனான சந்திப்பு ஒன்றில் பேசியபோதே மேற்கண்டவாறு அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆழிப்பேரலையினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவல் வெளியானதும், வவுனியா மாவட்டத்தின் சகலருடைய ஒத்துழைப்பும் கிடைத்ததின் காரணமாக நிறைவான சேவைகளை செய்ய முடிந்தது. மக்கள் இதனை உணர்வு பூர்வமாக உணர்ந்து செயற்பட்டார்கள். அதனால பாரிய நெருக்கடிகளை இலகுவாக சரிசெய்ய முடிந்தது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்கள் இதுவரை பாடசாலை கட்டடங்களில் தங்கியுள்ளனர். பாடசாலைகளை திறக்கும் நோக்குடன் இவர்களுக்காக தற்காலிக இருப்பிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் நிரந்த வசிப்பிடங்களை தொண்டர் நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மிக சிறப்பான பணியினை வன்னியில் மேற்கொண்டுள்ளது எனவும் ஞானவேல் மேலும் தெரிவித்தார். (க-4)

## இராசிபலன்

08.02.2005

(தை 26 செவ்வாய்க்கிழமை)

சதுர்த்தசி முற்பகல் 7.26 மணிவரை

அமாவாசை முற்பகல் 7.27 தொடக்கம்

திருவோணம் நள்ளிரவு 12.02மணிவரை

இராகுகாலம் 03.35- 05.05

சுபநேரம் 11.05 -12.35 மணிவரை

அமாவாசை விரதம்

| | |
|---|---|
| மேடம் | தொழில் நன்மை, நல்லசெய்தி, அதிகாரம், காரிய அனுகூலம். |
| இடபம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, வீண்பயம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | எதிர்பாராத அச்சம், உடல் வியாதி, காரியத் தடங்கல், போசனசுகம். |
| கடகம் | வாகனசுகம், போசனசுகம், உடல் நலம், காரிய அனுகூலம். |
| சிங்கம் | காரிய நன்மை, மனமகிழ்ச்சி, உறவினர் சந்திப்பு, பணவருவாய். |
| கன்னி | குடும்பக்கவலை, காரிய இடையூறு, வியாபாரநன்மை, உடல்வியாதி. |
| துலாம் | மாதாசுகம், கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | பணவருவாய், இனிய சம்பவம், பெருமையடைதல், கூட்டுமுயற்சி. |
| தனுசு | பொருள் விரயம், கௌரவக்குறைவு, காரிய இடையூறு, கோபப்படுதல். |
| மகரம் | பெரியோர் சந்திப்பு, நல்லமுயற்சி, ஆழ்ந்தசிந்தை, சயனசுகம். |
| கும்பம் | பிதாசிந்தை, உணர்ச்சிவசப்படுதல், பணவிரயம், முயற்சி தாமதம். |
| மீனம் | தொழில்சிந்தை, பெருமையடைதல், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது – வளவன்

## 'உலகத் தமிழர்குரல்' வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம், யாழ்ப்பாண இலங்கைக் கிளையினரின் டிசம்பர் 2004 வெளியீடான உலகத் தமிழர் குரல் -(இதழ் 20) அண்மையில் வெளிவந்துள்ளது.

புதுவையில் நடைபெற்ற உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஒன்பதாவது மாநாடு பற்றிய சிறப்புக்கட்டுரையும் மற்றும் தமிழ் மொழியுடன் தொடர்புடைய பல கட்டுரைகளும் இநத இதழில் இடம்பெற்றுள்ளன.(து)

## அபிராமிப்பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்மன ஆலயத்தில் முதல் முறையாக அபிராமிப்படடர் விழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. பிற்பகல் 4 மணியளவில் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி விஷேட பூசைகள் நடைபெறும். சிறப்பு நிகழ்ச்சியாக யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் ஸ்ரீதர்ஷனனால் அபிராமி அந்தாதி இசைக்கப்படும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதிஉலா வருவார். (ப-35)

## விடுதலைப் புலிகளின் விமான அணி?

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப்புலிகள் வசம் விமானப்படை ஒன்று இருப்பது பற்றிய செய்திகள் புலனாய்வுத் தகவல்களை மேற்கோள காட்டி தென்னிலங்கை ஊடகங்களில் பரபரப்பாக வெளியாகியிருக்கின்றன.

புலிகளின் விமானங்கள் இரணைமடுப பகுதியில் உள்ள ஓடுபாதை ஒன்றில் தரையிறங்குவதை ஆளில்லா வேவு விமானங்கள் வீடியோப் படம் பிடித்திருப்பதாகத் தெரிவித்து அப்படங்கள் சிலவும தென்னிலங்கைப் பத்திரிகை ஒன்றில் பிரசுரமாகியிருக்கின்றன. (க)


## வெதுப்பக உற்பத்தியாளர்கள் சகலருக்குமான முக்கிய கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் வெதுப்பக உற்பத்தி செய்யும் உரிமையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் உரிமைபெற்ற சகலருக்குமான கலந்துரையாடல் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். விலைக்கட்டுப்பாட்டுப் பொறுப்பாளர் திரு செழியன் தலைமை தாங்குவார். மற்றும் யா.மா.அரசியல்துறைப் பொறுப்பாளர், நிர்வாகப் பொறுப்பாளர், கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர், பொது இணையங்களின் பொறுப்பாளர் ஆகியோர்களும் கலந்துகொள்வார்கள்.

காலம் :- 09.02.2005 புதன்கிழமை பகல் 10 மணி

இடம் :- நாவலர் கலாசார மண்டபம்

விடயம் :- வெதுப்பகங்களுக்கான மா விநியோகம்

இக் கலந்துரையாடலில் வெதுப்பக உற்பத்தி செய்யும் சகலரும் தவறாது கலந்துகொண்டு தேவையான மாவினைப் பெறுவதற்குரிய உத்தரவாதத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

யா.மா.வெ.உ.கூட்டுறவுச்சங்கம்

(9257) யா.மா.வெதுப்பக உரிமையாளர் சங்கம்

# பகிடிவதை புரிவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

# யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் எச்சரிக்கை

**யாழ்.பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவர்கள் மீது பகிடிவதைகள் தொடர்வதாகப் பல்வேறு தகவல்கள் எமக்குக் கிடைக்கப்பெற்று வருகின்றன. இந்த நிலையில் பகிடி வதைகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைச் சகல மாணவர்களுக்கும் மாணவர் ஒன்றியமாகிய நாம் தெரிவித்துக்கொள்கிறோம்.**

இவ்வாறு யாழ்.பல்கலைக் கழகமாணவர் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து ஒன்றியத்தினரால் நேற்று விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

பல்வேறு பாதிப்புக்களின் மத்தியில் தமது உயர்கல்வியைத் தொடரவேண்டும் என்ற இலட்சியத்துடன் பல்கலைக் கழகத்துக்குள் நுழையும் மாணவர்கள் மீது பகிடிவதை என்கின்ற விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபடு வதனை மாணவர்கள் நிறுத்த வேண்டும். உடைமைகள் இழந்து உறவினர்களின் உயிர்களைப் பறிகொடுத்து மனரீதியாகப் பல்வேறு பாதிப்புக்குள்ளாகிய நிலையில் பல மாணவர்கள் பல்கலைக்கழகப் படிப்புக்காக காலடிபதிக்கும் வேளையில், நாகரிகமற்ற செயற்பாடாகவே இந்தப்பகிடி வதைகள் அமையும் என்பதனை நாம் குறிப்பிட விரும்புகின்றோம். அத்தோடு ஒரு சில பல்கலைக் கழக மாணவர்களினால் மேற் கொள்ளப்படும் பகிடிவதை என்கின்ற அநாகரிகமான செயற்பாட்டினால் ஒட்டுமொத்தமான பல் கலைக் கழகமாணவர்களுக்கும் பல் கலைக்கழகத்தினுடைய நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுகின்ற நடவடிக்கையாகவே இந்தப் பகிடிவதை அமைகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நேசக்கரம் கொடுத்து மனிதநேயத்துடன் வரவேற்பதே இந்த நேரத்தில் அவர்களுக்கும் சமூகத்துக்கும் நாம் ஆற்றும் சேவையாக அமையும். இதனை விடுத்து புதிய மாணவர்களைப் பயமுறுத்தும் செயற்பாடுகளிலும் மனரீதியான அழுத்தத்தினை ஏற்படுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவது நாகரிகமற்ற மனித நேயமற்ற செயற்பாடாகும். எனவே புதிய மாணவர்களை அன்போடு வரவேற்று அவர்களுக்கு உதவிகளைச்செய்து அவர்கடைய கல்விச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கும்படி சகல மாணவர்களையும் அன்புடன் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாகியநாம் கேட்டுக்கொள்கின்றோம்.

இதனையும் மீறி பகிடி வதைகளில் மாணவர்கள் ஈடுபட்டால் அவர்கள் மீது பல்கலைக் கழகநிர்வாகம் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக் கும்நாம் பூரண ஒத்துழைப் பினை வழங்குவோம். அத்தோடு பகிடி வதைகளில் ஈடுபடுகின்ற மாணவர்கள் தொடர்பான தகவல்களை பல்கலைக்கழகமாணவர்கள்,பொதுமக்கள், ஏனைய ஊடகங்கள் எமக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளுகின் றோம்.

சமூகத்தினால் விரும்பத்தகாதபகிடிவதை என்ற செயற்பாட்டினைத் தொடர்ந்தும் பல்கலைக்கழகத்துக்குள் நாம் அனுமதிக்கப் போவதில்லை ஆகவே இந்தநடவடிக்கையினை முற்றாக நிறுத்துவதற்கு சகல வழிகளிலும் சகலதரப்பினரிடமிருந்தும் பல்கலைக் கழகமாணவர் ஒன்றியமாகிய நாம் ஒத்துழைப்பினை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

புதிய மாணவர்களை அன்போடுவரவேற்றும் மாணவர் ஒன்றியமாகிய நாம் தங்கள் மீது யாராவது பகிடிவதை செயற்பாட்டினை மேற்கொண்டால் இது தொடர்பாக எமது மாணவர் ஒன்றியத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும்,

அவ் வாறான பகிடிவதைச் செயற் பாட்டிற்கு எதிராக மாணவர் ஒன்றியம் உடனடி நடவடிக்கை எடுக்கும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

எனவே புதிய மாணவர்களுடைய கல்விச்செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுவதற்கும், அவர்களுக்குத் தேவை யான உதவிகளைச் செய்து கொடுப்பதற்கும் யாழ. பல்கலைக் கழகமாணவர் ஒன்றியமாகிய நாம்எப் பொழுதும்தயாராக இருக்கின்றோம்,

என்பதனை அறியத்தருகின்றோம் என அதில் மேலும் கோரப்பட்டுள்ளது.

(ப)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோரின் வாழ்வை மீளக்கட்டியெழுப்ப வேண்டியது எமது கடமை

## யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் உரை

(மருதங்கேணி)

சுனாமி பேரலை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பும் கடப்பாடு எமக்குள்ளது. இவ்வாறு யாழ்.அரசஅதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை சென்தோமஸ் தேவால முன்றலில் நடைபெற்ற சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 14 மீனவக் குடும்பங்களுக்கு படகு இயந்திரங்கள் வலை வழங்கும் வைபத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனை அவர் தெரிவித்தார்.

கணேஷ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு உதவுவென பல அரசசார்பற்ற நிறுவனங்கள் தினமும் வந்து புள்ளி விபரங்கள் எடுத்துச் செல்கின்றன. ஆனால் எந்த நிறுவனமும் இவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக எதையும் செய்யவில்லை. ஆனால் கியூ மெடிக்கா நிறுவனம்தான் முதல் முதலாக விரைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமது தொழிலை மீள ஆரம்பிப்பதற்கு வசதியாக படகு இயந்திரங்கள் வலைகள் வழங்க ஆக்கபூர்வமான உதவியில் இறங்கியுள்ளது.

இவ் நிறுவனம் பாதிக்கப்


இந்நிகழ்வில் கியூ மெடிக்கா நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் போதகர் சாம் ராஜ்சூரியர் பேசுகையில்,

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாதாரண தேவையைத்தான் இன்று பூர்த்தி செய்துள்ளோம், கடவுளின் அன்புதான் இந்த சிறிய உதவியைத்தந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயன்ற வரை உதவிசெய்வோம் உதவிகள் செய்ய முடியாவிட்டால் ஒதுங்கிவிடுவோம் எமக்கு பேர் புகழ் எதுவும் தேவையில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயந்திரங்கள், வலைகள் என்பவற்றை வழங்க எண்ணியுள்ளோம். படகுகளையும் இயந்திரங்களையம் 4 மாத காலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆனால் வலைகளை பெற முடியாதுள்ளது. வலைகளை உற்பத்திசெய்யும் நிறுவனங்களில் இருந்து உடனடியாக வலைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது.

உற்பத்தி போதாமல் உள்ளது. அவற்றை இறக்குமதி செய்தே தரவேண்டும் ஆகையால்



ந்துள்ள அப் பகுதிகளையும் நாம் மேம்படுத்த வேண்டும் எல்லாவற்றிற்கும் கடவுள்தான் துணையாக இருப்பார். நம்பிக்கையுடன் இருப்போம் என அவர் தெரிவித்தார்.

இவ் வைபவத்தில் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்,எம்.கே.சிவாஜிலிங்கம், என். கஜேந்திரன், சி.சிவனேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு பயஸ், இருதயதாஸ்,

### சுனாமியால் பாதிக்கப்பட்ட

# திருகோணமலை மக்களுக்கு வீடமைத்து கொடுக்கப்படும்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களுக்கு தற்காலிக இருப்பிடங்கள் அமைத்துக் கொடுக்கப்படும் என அமைச்சர் தினேஸ்குணவர்த்ன தெரிவித்துள்ளார்.

திருகோணமலைக்கு விஜயம் செய்யும்போதே அமைச்சர் இவ் உறுதிமொழியை வழங்கினார்.

பெயர்ந்த 31 ஆயிரம் பேர்களில் தற்சமயம் 6ஆயிரம் பேர் மாத்திரமே நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளார்கள்.

சேதமடைந்த பாடசாலைகளைத் திருத்தியமைக்கப்படும் வேலைகள் அடுத்தவாரம் வாரம் ஆரம்பமாகும். அதற்கான சகல ஆயத்தங்களும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

திருகோணமலைக்கு விஜயம் செய்யும்போதே அமைச்சர் இவ் உறுதிமொழியை வழங்கினார்.

முழுமையாக சேதப்படுத்தப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும். அதே சமயம் ஓரளவு சேதமடைந்த 4ஆயிரம் வீடுகள் திருத்திக்கொடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் இடம்

ஆரம்பமாகும். அதற்கான சகல ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தம்மால் வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் சமமான வகையில் பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாகவும் அங்கு அது தொடர்பாக எவ்வித பிரச்சினையும் நிலவவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

(ப-4)

மான உதவியில் இறங்கியுள்ளது.

இவ் நிறுவனம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து உதவ வேண்டும் அதற்கு எமது ஒத்துழைப்பு என்றும் உண்டு என்றார்.

உற்பத்தி போதாமல் உள்ளது. அவற்றை இறக்குமதி செய்தே தரவேண்டும் ஆகையால் வலைகளைத் தந்து உதவ 6மாதங்கள் ஆகும்.

முல்லைத்தீவிலே பேரலையால் மோசமாகப் பாதிப்படை

திருமதி பதமினி சிதம்பரநாதன், பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு பயஸ், இருதயதாஸ், கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் கே.தர்மலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ப-35)

# மத்திய மாகாண சபை அமைச்சராக வி.ராதாகிருஷ்ணன் பதவியேற்றார்

(நுவரெலியா)

மத்திய மாகாண சபையின் அமைச்சராக மாகாணசபை உறுப்பினர் வி.ராதா கிருஷ்ணன் நேற்று பதவியேற்றுள்ளார்.

தமிழ் முஸ்லிம் கல்வி, தோட்ட உட்கட்டமைப்பு, இளைஞர் விவகாரம், விளையாடு, கால்நடை அபிவிருத்தி, கைத்தொழில் ஆகியவற்றுக்கான அமைச்சராக, மத்திய மாகாண ஆளுநர் மொன்டி கோபல்லாவ முன்னிலையில் ராதா கிருஷ்ணன் நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற இப்பதவியேற்பு வைபவத்தில் மாகாண முதலமைச்சர் சரத் ஏகநாயக்க உட்பட பல அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிப் பட்டியலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ராதாகிருஷ்ணன், கடந்த மாகாணசபையிலும் அமைச்சராகக் கடமையாற்றியவர்.

மத்திய மாகாண சபையின் ஆட்சியில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினர் கைப்பற்றிய போதும், ஐந்து அமைச்சுப் பதவிகளில் நான்கு பேர் மாத்திரமே பதவியேற்றுள்ளனர்.

இந்நிலையில் ஐந்தாவது அமைச்சுப் பதவியை யாருக்கு வழங்குவது என்பதில் கடந்த சில மாதங்களாக சர்ச்சை நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# சகல நிறுவனங்களும் மீண்டும் பதிவு செய்துகொள்ள வேண்டும்

## நிதியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்த மீள் கட்டமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள சகல அரசசார்பற்ற நிறுவனங்களும், மீண்டும் பதிவு செய்யவேண்டியது அவசியம் என்று நிதியமைச்சு. அறிவித்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தின் போது இலங்கைக்கு கிடைத்த வளங்களை செயற்திறன் மிக்க வகையில் கிரமமான முறையில் பயன்படுத்துவதற்கு விரிவான இணைப்புத் திட்டங்களை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி தற்போது அரசசார்பற்ற நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள், அவற்றுக்கான மதிப்பீடுகள் செலவினங்கள் என்பன குறித்து திட்டமிடும் அமைச்சுடன் கலந்துரையாடி தெளிவுபடுத்தவேண்டும் என்று தெரிவித்தார்.

இதில் வெளிநாட்டு நிதிகளை திட்டமிடும் வழிமுறைகள், ஆண்டு அறிக்கைகள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள சேமிப்பு மற்றும் நிதியறிக்கைகள் என்பவற்றுடனேயே நிதி அமைச்சுக்கு இந்தத்திட்டங்கள் அனுப்பப்பட வேண்டும் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை அரசசார்பற்ற நிறுவனங்களின் சகல திட்டங்களும் அமைச்சின் அனுமதியுடனேயே செயற்படுத்த வேண்டும் என்றும் அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

சுனாமிபுனர் நிர்மாண நடவடிக்கைகளில் அரசசார்பற்ற நிறு வனங்களை அரசாங்கத்தின் உதவியாளர்களாக செயற்படுத்துவதற்கான பின்னணியை ஏற்படுத்துவதற்கும் வெளிநாட்டு உதவிகளை பாதிக்கப்பட்ட பகுதிகளில் செயல் திறன்மிக்க முறையில் பயன்படுத்தவும் நிதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

(க-9)

## இன்று ஒரு தகவல்

# காது

"சப்தமில்லாமல் ஒருவனைக் கொல்லக் கூடியது எது" என்று கேட்டார் ஒருவர். "எனக்குத் தெரியவில்லை நீங் களே சொல்லுங்கள்!" என்றார் இன்னொருவர்."மனிதனை சப்தமில்லாமல் கொல்லக் கூடியது சப்தம் தான்" என்றார் அவர். கேட்டவருக்கு மிகுந்த ஆச்சரியமாகிவிட் டது.

இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தொடர்ந்தும் சப்தத்திற்கு மத்தியில் நாம் இருந்தோமென்றால் கொஞ்சம் கொஞ்சமாக காது கேட்காமல் போய்விடும். அது மட்டுமல்ல வேறு சில பாதிப்புக்களும் வந்துவிடும். இருதயத்துடிப்பு அதிகரிக்கும். இரத்தக் கொதிப்பு அதிகரிக்கும். **Peptic aleer** வரும். ஒவ்வாமை வரும். நரம்புத்தளர்ச்சி உண்டாகும்.

இப்போதெல்லாம் விடுமுறை நாட்களில் ஓய்வு எடுப்பது எப்படி? தியேட்டருக்குப் போவது அல்லது நண்பர்களுடன் சேர்ந்து அரட்டையடிப்பது, ஊர்சுற்றுவது இது தான் நாம் லீவு நாளை உபயோகப்படுத்துகின்ற முறை. ஆனால் உண்மையான ஓய்வு என்பது இதுவல்ல. சப்தமில்லாமல் சூழ்நிலையில் மன அமைதியுடன் நேரத்தைக்கழிக்க வேண்டும் அது தான் ஓய்வு. நிறைய வேலை செய்கின்ற ஜப்பானியர்கள் இப்படித் தான் ஓய்வு எடுப்பார்கள். இதற்கு உபயோகப்படுத்துவதற்காகவே **Silence Room** என்று பல அறைகளைக் கட்டி வைத்திருக்கிறார்கள். உள்ளே போய்விட்டால் ஒரு சத்தமும் கேட்காது. அவர்கள் **Silence Room** கட்டுகிறார்கள் நாம் அறையில் **Silence pleace** என்று எழுதிவைக்கிறோம்.

அதெல்லாம் இருக்கட்டும் நம்மில் பலருக்கு சப்தத்திற்கு மத்தியிலேயே இருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. அவர்களின் காதைக் காப்பாற்றுவதற்கு ஏதாவது வழி உண்டா? உண்டு. இந்திய விஞ்ஞானிகள் இதற்கு ஒரு வழி கண்டு பிடித்திருக்கின்றனர். அதாவது **Carleogn** வாயுவை சுவாசித்தால் காது கேட்காமல் போவதைத் தவிர்த்து விடலாம். **Carleogn** வாயு என்றால் என்ன? பிராணவாயு 95% கரியமில வாயு 5% இவையிரண்டும் சேர்ந்த கலவைதான் **Carleogn** சத்தம் அதிகமாக உள்ள இடங்களில் வேலை செய்பவர்கள் வேலைக்குப் போவதற்கு முன்போ பின்போ கொஞ்ச நேரம் இந்தக் கலவையை சுவாசித்தல் போதும் காதுக்கு ஒன்றும் கெடுதல்வராது.

அதுசரி... மனித உடலில் தான் எது போனாலும் செயற்கையாக அதைப் பொருத்திக் கொள்ளும் வசதிகள் வந்துவிட்டதே அதுபோல் செயற்கையாக காது செய்து வைத்துக் கொண்டால் என்ன? அதுவும் செய்யலாம். பிறவியிலேயே காது கேட்காமல் போனவர்கள் எல்லோரும் இப்படி செயற்கைக் காது வைத்துக்கொள்ளலாம்.

அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் இதைக் கண்டு பிடித்திருக்கின்றனர். நமது காதினுள் கொக்லியா என்று ஒரு பகுதி உண்டு. நத்தை ஓடுமாதிரி கருக்கும். அதில் 10 ஆயிரத்திற்கு அதிகமான **Haircells** உள்ளன. இவை ஒலி அலைகளை **Electrical Signal** ஆக மாற்றுகிறது. இந்தமின் அலைகள் நரம்புகளை தூண்டும்போது தான் நாம் சப்தத்தைக் கேட்கிறோம்.

காது கேட்காதவர்களுக்கு என்ன செய்கின்றோம் என்றால் 22 சிறிய **Electrcde** களை இந்த **Haircell** இற்குப் பதிலாகப் பொருத்திவிடுகிறார்கள் அவ்வளவுதான் காது கேட்க ஆரம்பித்துவிடும். இந்தக் கருவி என்ன செய்கிறது என்றால் **Microphone** ஒலி அலைகளை எடுத்து **Processor** வேறு வேறு **Frequency** யாக **Filter** செய்து **Receiver** இற்கு அனுப்புகிறது. இப்படி பிரித்தெடுக்கப்பட்ட **Frequency cochlea** வில் பொருத்தப்பட்டுள்ள **Electrode** களுக்கு இதை அனுப்பி வரும். ஆகக் கூடி காது நன்கு கேட்க ஆரம்பித்துவிடும்.

ஒருவர் காதைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை உள்ளவர். இருந்தாலும் சத்தம் அதிகமாக உள்ள ஒரு தொழிற்சாலையில் அவர் மனேஜர். வேறு வழியில்லாமல் போய் வந்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் வேலை முடிந்து ஒரு டவுன் பஸ் மூலம் வீட்டிற்கு திரும்பிக்கொண்டிருந்தார். இவரது பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் ஏதோ சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டு வந்தார். இவருக்கு அவர் பேசுவது சுத்தமாகக் கேட்கவில்லை. இருந்தாலும் வெளியே காட்டிக்கொள்ளாமல் அவர் சொல்வதற்கெல்லாம் தலையாட்டிக்கொண்டே வந்தார்.

கடைசியாக பஸ்வந்து நின்றது இவர் இறங்கினார். அவரும் இறங்கினார். இவர் அவரிடம் தனது குறையைக் காட்டிக்கொள்ளாமல் கௌரவாக "சார்! நீங்கள் என்னுடன் வழி நெடுகப் பேசிக்கொண்டே வந்தீர்கள் எல்லாம் மிகவும் அபூர்வமான விடயங்கள் மிக்க நன்றி!" என்றார் . அதற்கு அவர் "நான் எங்கே சார் உங்களிடம் பேசிக்கொண்டுவந்தேன் வாயில் சுயிங்கம் வைத்துக்கொண்டு அதையல்லவா மென்று கொண்டு வந்தேன்" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# தமிழ் மக்கள் மீதான காடைத்தனத்தை அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்

## அரியநேந்திரன் எம்.பி கோரிக்கை

(மட்டக்களப்பு)

தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனின் புகைப் படத்தை அகற்றவோ, அதில் கை வைக்கவோ அல்லது அகற்றுமாறு கேட்கவோ விசேட அதிரடிப்படையினருக்கோ அல்லது ஜே.வி.பி. கட்சியினருக்கோ எந்தவித அருகதையும் இல்லையென மட்டக்களப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை திருக்கோவில் பிரதேச செயலகத்தில் அத்துமீறி நுழைந்த அதிரடிப்படை சிப்பாய் ஒருவர் தேசியத் தலைவரின் புகைப்படத்தை எடுத்து வீசியது தொடர்பாக கருத்து கூறிய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில், தேசியத் தலைவரின் புகைப்படத்தை அகற்றுவதற்கு பின்னணியில் ஜே.வி.பி யினரின் இனவாதம் இருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. சுனாமியின் நிவாரணம் மனிதாபிமானப் பணி என்ற போர்வையில் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை குழிதோண்டிப் புதைக்கும் செயலில் ஜே.வி.பியினர் ஈடுபட்டுள்ளதன் விளைவாகவே தேசியத் தலைவரின் புகைப்படம் அகற்றும் செயலை கருதக் கூடியதாய் உள்ளது.

ஆட்டைக்கடித்து, மாட்டைக்கடித்து இப்போது எம்மையும் கடிக்கும் செயலில் ஜே.வி.பியினர் தொடர்ந்து ஈடுபட்டால் பாரிய விளைவுகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக விசேட அதிரடிப்படையினர் திட்டமிட்டு தமிழ் மக்களின் மீது காடைத்தனங்களை கட்டவிழ்த்துள்ளமையை அரசு தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் மேலும் தெரிவித்தார். (க)

## தமிழர் புனர்வாழ்வுக்கழகம் குறித்த

# ஜே.வி.பி யின் கருத்துக்கு சுரேஸ் எம்.பியும் அடைக்கலநாதன் எம்.பியும் கடும் கண்டனம்

(கிளிநொச்சி).

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மக்களுக்கு சேவை செய்து வருகின்றது. யுத்த காலத்தின் போதும், சுனாமி பேரலையின் தாக்கத்தின் பின்னர் நிவாரணங்களையும்



மீட்புப் பணிகளையும் மேற்கொண்டுவருவது தமிழர் புனர்வாழ்வுக் கழகம். ஆனால் ஜே.வி.பி. இனவாத நோக்குடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மீது பொய்யான பிரசாரங்களை செய்து வருவது கண்டனத்துக்குரியது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரனும் அடைக்கலநாதன் எம்.பியும் தெரிவித்துள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வெளிநாடுகளில் சேர்க்கும் நிதிகளுக்கு கணக்கு காட்ட வேண்டும் எனவும் புலிகளுக்கு வேண்டிய யுத்தகால உணவுகளை சேர்த்து வருவதாகவும் ஜே.வி.பி. குற்றம் சுமத்தியமை தொடர்பாகக் கேட்டபோதே இவர்கள மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.யும் கூட்டமைப்பின் இணைப்பாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

சுனாமி பேரலைதாக்கி ஒரு மாதம் கடந்த பின்னரும் கூட அரசாங்கம் வடக்கு- கிழக்கு மாகாணத்திற்கு இன்னமும் நிவாரணங்களை அனுப்பவில்லை. மீட்புப் பணிகளுக்கு கூட உடனடியாக உபகரணங்களை அரசு அனுப்பி வைக்கவில்லை.

ஆனால், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தான் உடனடியாக நிவாரணங்களையும் மீட்புப்பணிகளையும் செய்தது. தற்போதும் கூட புனர்வாழ்வுக் கழகம்தான் உதவிகளை செய்து வருகின்றது. வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடம் நிதியைப் பெற்றுத் தான் அவர்கள் உதவிகளை செய்து வருகின்றார்கள்.

இந்த நிலையில் ஜே.வி.பி. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக கூக்குரலிடுவது அர்த்தமற்றது. ஜே.வி.பி. எதைத்தான் இனவாத நோக்குடன் பார்க்கவில்லை? தனியான நிர் வாகக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலமாக வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கும் அரசாங்கம் இன்னமும் இணக்கம் தெரிவிக்கவில்லை.



ஒட்டு மொத்தமாக தமிழ் மக்களுக்கு எதுவும் வழங்காமல் அவர்களை அடிமையாக வைத்திருப்பதற்குத் தான் ஜே.வி.பி யும் அரசாங்கமும் திட்டமிடுகின்றன. ஆனால், அவர் கள் நினைப்பது எதுவும் நடக்காது' என்றார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யும் பாராளுமன்ற குழுவின் பிரதம கொரடாவுமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கையில்,

வடக்கு- கிழக்கு மாகாணத்திற்கு நிவாரணங்களை அரசாங்கம் வழங்கவில்லையென்பதை சில அரச அதிகாரிகளே ஒப்புக் கொண்டுள்ளனர். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அங்கு நல்ல சேவை செய்கின்றது என்பதை அந்த அரச அதிகாரிகள் கூறியுமுள்ளனர்.

இந்த நிலையில் ஜே.வி.பி. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மீது குற்றம் சுமத்துவதும் அவர்கள் கணக்குகளைக் காட்ட வேண்டும் எனக்கோருவதும் அர்த்தமற்றது. ஜே.வி.பி. எப்போதுமே இனவாதம் பேசி பழக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு யதார்த்தம் எது? என்று தெரியாது. அவர்கள் பேச்சுக்களுக்கு நாங்கள் முக்கியத்துவமளிக்க வேண்டிய அவசியமும் இல்லை. ஆனாலும் புனர்வாழ்வுக் கழகம் தொடர்பான அவர்களின் கூற்றை கண்டிக்கின்றோம். (க)

# இலங்கைக்கு வரும் பில்கிளின்டன் சமாதான நடவடிக்கையில் ஈடுபடார்

(கொழும்பு)

சுனாமி நிவாரணப் பணிகளுக்கான ஐக்கிய தேசிய நாடுகளின் விசேட தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்டன் இலங்கை, இந்தோனேஷியா நாடுகளில் சமாதான முயற்சிகளில் ஈடுபடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் பிரெட் எக்கார்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சுனாமி நிவாரணத் தூதுவராக கிளின்டன் நியமிக்கப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட போது இந்தோனேஷியா, இலங்கை ஆகிய நாடுகளில் போராட்ட இயக்கங்களுடனான அரசியல் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கும் ஐக்கிய நாடுகள் விரும்புகிறது என எக்கார்ட் தெரிவித்தார்.

ஆனால் மறுநாள் இதில் திருத்தமொன்று இருப்பதாகக் கூறிய அவர், கிளின்டனின் பணியில் மேற்படி நாடுகளின் சமாதான முயற்சிகள் உள்ளடக்கப்படமாட்டாது எனத் தெரிவித்தார்.

புனரமைப்பு மீள் கட்டுமானப் பணிகளில் சர்வதேச சமூகம் நீண்டகாலத்திற்கு ஈடுபடுவதை உறுதி செய்வதே கிளின்டனின் நியமன நோக்கமாகும் எனவும் அவர் மேலும் கூறினார். (க-9)

# இனத்தைப் பாதுகாக்கும் தார்மீகப் பணியில் தலைமை

(மாவடி)

எமது இனத்தைப் பாதுகாக்கும் தார்மீகப் பணியினை எமது தலைமை தெளிவாக முன்னெடுத்து வருகின்றது என மாவடி முன்மாரிக் கோட்டத் தளபதி றமணன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாவீரர்களின் பெற்றோர்களை சந்தித்துக் கலந்துரையாடிய தளபதி றமணன் அவர்கள் மத்தியில் கருத்துத்தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஒவ்வொரு நாட்டையும் பாதுகாப்பதற்கு இராணுவம் இருப்பது போன்றே எமது இனத்தையும் தாயகத்தையும் பாதுகாக்க எமது தலைமை கரிசனையான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

எனவே போராளிகளுக்கு பலம் சேர்ப்பதில் தமிழர்கள் ஒவ்வொருவரும் உறுதுணையாக இருக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (க-4)

# அழிவிலிருந்து இந்த நாடு மீளுமா? அன்றேல் அரசியல் பகடையாகச் சுழலுமா?

சுனாமி நமக்கு நல்ல பாடங்களை கற் பித்துள்ளது என்று சொல்கிறார்கள். இன, மத, வேறுபாடின்றி எல்லாருமே பாதிக்கப் பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். எல்லாரும் ஒற்றுமைப்பட வேண்டிய தேவையை இயற் கை உணர்த்தியுள்ளதாகச் சொல்கிறார்கள்.

அது ஒரு பாடம் என்றால், அது பய னுள்ள பாடம் தான்.

ஆனால் இயற்கையின் பாதிப்பு சமூக வேறுபாடற்ற முறையில் அமைந்ததாக நிச்சயமாக இல்லை. வசதியுள்ளவர்களை விட வசதியற்றவர்கள் தாம் எல்லா விதங்களி லும், எண்ணிக்கையில் மட்டுமில்லாமல், விகிதாசார அடிப்படையிலும், மிக அதிகமா கப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஏனெனில், இயற்கை சீற்றத்துக்கு உள்ளாகக் கூடிய கரையோர வதிவிடங்களே குறிப்பாகப் பாதுகாப்புக் குறைவான பலவீனமான வதி விடங்களே அதிகம் பாதிக்கப்பட்டன.

நிவாரணத்தைப் பொறுத்தவரை, காப்பு றுதி நிறுவனங்கள் வணிகர்களையும், வசதி படைத்தவர்களையும் பெருமளவுக்குக் கவ னித்துக் கொண்டுள்ளன. அரசாங்க மும் கவனிக்கிறது எந்த வசதி படைத்த மனித ராவது ஒரு அகதி முகாமில் இரண்டு மூன்று நாட்களுக்கு மேற் தங்க நேரிட்டதாக அறிந்த துண்டா? எனவே, இயற்கை விரும்பினாலும் எல்லாரையும் சம அளவிற் தண்டிக்க இய லாது. ஆதலால் பாசாங்குகளை நாம் முத லில் விட்டொழிக்க வேண்டும்.

இன்று அதிகம் உதவி தேவைப்படுவோர் வீடிழந்து, உற்றார், உறவினரை இழந்து அனா தரவாகி நிற்கிறார்களே அவர்கள் தாம். அவர் களுக்கு என்ன தேவை என்று அறிந்தது போல பேசுகிற அதிகாரிகளும் நிபுணர்க ளும் முதலில் அல்லற்படுவோரின் உடனடி யான தேவைகளை நிறைவேற்ற முயல வேண்டும்.

அவர்களுடைய வாழ்க்கையை எப்படிக் கட்டியெழுப்புவது என்ற முடிவில் அவாகளது எண்ணங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

அவர்கள் யாருடைய தயவிலும் தங்கி யிருக்க கூடாது என்று உண்மையாகவே நமபு கிறவர்கள் எவரும், அவர்களுடைய எதிர்காலம் பற்றிய முடிவுகளை அவர்கள் மீது திணிக்க முடியுமா?ந்தளவுக்கு இந்த நாட்டில் மக்களின் அவலத்தைப் பயன் படுத்தி அதிகார வாசுகமும் அரசியல்வாதி களும் நிபுணர்கள் எனப்படுவோரும் தமது நலன்களைப் பெருக்கிக் கொள்கிறார் களோ, அதே அளவுக்கு நாட்டின் அவலத் தைப் பயன்படுத்தி அயல நாடுகள், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத் தியமும் இந்திய மேலாதிக்கமும், இந்த நாட்டைத் தமது ஆதிககத்திற் குட்படுத்து வதற்கும் தமது ஆதிககத்தை விஸ்தாிப் பதற்கும் முயலுகின்றன.

அதற்கு வசதி செய்கிற விதமாகவே, போி னவாத அரசியற் கட்சிகளும் அரசாங்கமும் நடந்து வருகின்றன.

அரசாங்க ஆதிக்கத்தில் உள்ள ஊடகங் களது நடத்தை மிகவும் வெட்கக்கேடான தாக உள்ளது. திவியின, ஜலண்ட் ஏடுகளது அக்கறை விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவதற்கு இன்றைய அவலத்தை எவ் வாறு பயன்படுத்துவது என்பதிலேயே குவிந் துள்ளது.

இவர்கள் எல்லாரும் என்ன பாடத்தைப் படித்திருக்கிறார்கள்?ஒற்றுமைக்கான நேரம் என்ற பேரில் எல்லாவிதமான விமர்சனங் களையும் ஓரங்கட்டும் முயற்சிகளை நாம் நிராகரிகக வேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்று படுவது என்றால், நாட்டு மக்களை ஒன்றுபட விடாமல் தடுப்பன எவையோ அவையாவும் நீக்கப்பட வேண்டும்.சிங்களப் பேரி னவா திகள் தேடுகிற ஒற்றுமை, யூ.என்.பி. யை யும், தேவையானால் ஜே.வி.பி.யை ஒதுக்கி விட்டு இதர அரசாங்கக் கட்சியினரையும் இணைத்து ஒரு தேசிய அரசாங்கத்தை உரு வாக்குவது மட்டுமே. வடக்கு- கிழக்கில் ஏற்கனவே பாதிப்புக்கு உட்பட்டு சுனாமி யால் மேலும் அல்லற்பட்டுள்ள மக்களை நிவாரணம் உதவி என்கிற போலி இராணுவ மயமாக்கி அரச ஆதிக்கத்துக்கு உட்படுத்து வதை வட்டால் அவர்கள் பற்றிய அக்கறை போனவாதிகளிடம் இல்லை.கிழக்குப் பகுதியின் புறக்கணிப்பு, தமிழர்-முஸ் லிம்கள் என்ற வேறுபாடின்றித் தொடர் கிறது.

கிழக்கில் சுனாமியின் தாக்குதலை அடுத்துச் சிங்கள மக்கள் காட்டிய மனி தாபிமானம் அவர்களைப் பேரினவாதி களிடமிருந்து தெளிவாகவே வேறுபடுத்திக் காட்டுகிறது.

எனவே நாட்டை ஒற்றுமைப் படுத்து வதறகான நம்பிக்கைக்கு இன்னமும் இடம் நிறைய உண்டு. ஆயினும் இன்றைய பேரின வாத அரசியல் தலைமைகளை அறவே நிராகரியாமல் நாட்டை ஒன்றுபடுத்த இய லாது.

நேர்மையான இடதுசாரிகள் பிரிவினை தவிர்ந்த நியாயமான தீர்வுகளைத் தொடர்ச் சியாக வற்புறுத்தி வந்துள்ளனர். இவர் களிற பெரும்பாலானோர் சுய நிர்ணய அடிப் படையிலான சுயாட்சி என்ற தீர்வை ஏற போர். அவர்களை வலுப்படுத்த வேண்டும்.

அரசாங்கத்தை அண்டிப் பிழைக்கிற தமிழ் அரசியற் கட்சிகள் மட்டுமன்றி மனித உரிமை, நடுவுநிலை நோக்கு என்கிற பாவ னைகளில் பேசுகிறவர்களும், இன்றைய அவலத்தின் நடுவிலும், பாரபட்சத்துக்குட் படும் தமிழ்-முஸ்லிம் மக்களது தேவை களை வற்புறுத்துவதற்கு மாறாக, விடு தலைப் புலிகள் மீது பழி சுமத்துவதிலேயே கண்ணாகவுள்ளனர்.

இவர்கள் ஒரு புறமிருக்கக் கட்சிச் சார் பற்ற சர்வதேச ஊடகங்கள் என்ற பாவனை யைப் பேணும் வானொலி, பத்திரிகை அமைப்புகள் சில சுனாமியைப் பாவித்துப் பேரினவாதிகளதும் மேலதிகச் சக்திகள தும் நலன்களை வற்புறுத்துகின்றன.

இவர்களுள் ஒருவர் சொன்னதை மற் றவர் ஆதாரமாகக் கூறுவதன் மூலம் தங்க ளது பிரசாரங்களுக்கு ஒரு 'தகவல் அடிப் படை' இருப்பதாகக் காட்டிக் கொள்வது ஒரு வசதியான ஏற்பாடாகிவிட்டது. முழு நாட் டையும் ஒற்றுமைப்படுத்துவதாகச் சொல் லிக் கொள்ளுகிற அரசு, இலங்கை தமிழ் மக் களை அரசியலிற் பிளவுபடுத்த முயல்வது பற்றி கவலைப்படவேண்டியதில்லை.

அது அவாகளது அரசியல். ஆனால், அரசாங்கம் திட்டமிட்டே புறக்கணிப்பதை நியாயப்படுத்துகிற விதமாக விடுதலைப் புலி களின் ஒத்துழையாமை போன்ற போலி யான காரணங்களை முன்வைப்பது மிகவும கண்டிக்கத்தக்கது.

இனறு வடக்கு-கிழக்கின் நிவாரண வேலை களுக்குப் பிரதானமான தடையாக உள்ள வர்களை விமர்சிக்காமல் எல்லாரையும் ஒரே தராசில் இட முடியாது. அரசாங்கம் நியாய உணர்வுடன் நடந்து கொள்ளாத வரை, புறக்கணிக்கப்பட்ட மக்கள் அரச சார் பற்ற தொண்டர் நிறுவனங்களையும் அயல் ஊடுறுவற்காரர்களையும் நாடவும் நம்பவும் வேண்டிய நிலையைத் தவிர்க்க முடியாது.

அமொிக்காவின் நோக்கங்களையும் இந்தி யாவின் நோக்கங்களையும் பற்றிச் சகல மக்களும் அறிய வேண்டிய நிலையில் மக் களின கவனத்தை இன முரண் பாட்டின் திசை யில் தள்ளுகிற முயற்சிகள் முழு நாட்டுக் கும் எதிரான துரோகச் செயல் களாகும்.

1983 வன்முறை, கால் நூற்றாண்டுக் கால இன ஒழிப்புப் போர், 1987 -89 உள்நாட்டுப் போர் என்பவற்றிலிருந்து எதையுமே கற்காத தலைமைகளே மாறி மாறி இந்த நாட்டை ஆளுகின்றன.

இவர்கள் சுனாமியிலிருந்து எதையுமே கற்கப்போவதில்லை. அவர்களுக்கு சுனாமி ஒரு அதிஷ்டச் சீட்டிழுப்பில் கிடைத்த பெரும் பரிசு. அவசரகால சட்டம், அது சார்ந்த ஜன நாயக ஒடுக்குமுறைகள், நிபந்தனையற்ற வெளிநாட்டு நிதி உதவி, வெளிநாட்டு கடன் மீள்அளிப்பு இடைநிறுத்தம்-இரத்து மாதிரி. அவர்கள் உள்ள வரை, ஒரு வெகுசன பேரவை எழாமல் எந்த அழிவினின்றும் இந்த நாட்டை மீட்க இயலாது. *(நன்றி இணையத்தளம்)*

# லிங்கநகரில் இருந்து மக்களை வெளியேற்றினால் மீண்டும் யுத்தம் வெடிக்கலாம்

(திருகோணமலை)

திருகோணமலை லிங்கநகரில் இருந்து மக்களை பலாத்காரமாக வெளியேற்ற இரா ணுவம் நடவடிக்கை எடுத்தால் மூன்று வருட காலமாக பாதுகாத்து வரும் போர் நிறுத்த ஒப்பந்தம் முறிவடைய லிங்கநகர் பிரச்சினை காரணமாக அமைந்துவிடும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித் துள்ளார்.

கடந்த சனிக்கிழமை லிங்கநகர் வாசிக சாலை முன்றலில் லிங்கநகர் காணி உரி மையாளர்களை பாராளுமன்ற உறுப்பினர் சந் தித்து நிலமைகளைக் கேட்டறிந்து கொண் டார்.

1987ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கு இராணுவம் தமிழ் மக்கள் குடியிருக்கும் காணிப்பகுதியில் முட்கம்பிகளை அமைக் கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது.

அதனை எமது போராளிகள் வெட்டி எறிந் தனர். அப்போது இங்கிருந்த இந்திய அமைதி காக்கும் படையினர் எமது போராளிகளை கைது செய்து தடுத்து வைத்திருந்தனர்.

வெட்டப்பட்ட முட்கம்பிகளை மீளவும் அமைத்துக் கொடுக்குமாறு நாம் கட்டாய மாக பணிக்கப்பட்டோம் ஆனாலும் அதற்கு நாம் உடன்படவில்லை.

இதன் பின்னர் இலங்கை இராணுவத் தின் செயற்பாடு குறைந்து காணப்பட்டது. ஆனால் மீண்டும் 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் இங்கு வாழ்ந்த மக்களை வெளி யேற்றும் முயற்சிகளில் இராணுவம் ஈடுபட்டு வந்துள்ளது.

எல்லை ஒன்றை அமைத்து அதற்கு உள்ளே வசிப்பவர்கள் அனைவரும் வெளி யேற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டது. இதற்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்தப்பட வேண் டும். 100 நாட்களுக்குள் இம் மக்களுக்கு நிரந்தர அனுமதிப்பத்திரத்தை அரசாங்கம் வழங்கவேண்டும். இல்லையேல் அதற்கு எதிராக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து போராட்டங்களை நடத்த வேண்டியிருக்கும்.

இராணுவம் இப்பகுதியை விட்டு மக் கள் வெளியேற வேண்டும் என்று தெரி விக்கும் கருத்துக்களை மாற்றிக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித் தார். (க-4)

## கல்வியக செயலாளர் இலங்கைக்கு விஜயம்

சர்வதேச கல்வியகத்தின் பொதுச் செயலா ளர் பிரட்மன் லியூவன் கடந்த வாரம் இலங் கைக்கு விஜயம் செய்தார்.

ஆசியப் பிராந்தியப் பிரதிநிதி அலோசி யஸ் மத்தியூஸும் அவருடன் வருகை தந்து சுனாமி புனரமைப்புக்குழுவின் தலைவர் திருமதி வி. அஞ்சலாவிடம் 5 இலட்சம் அமெரிக்க டொலர்களைக் கையளித்தார். (க-9)

## "ஆற்றுகை" வெளிவந்துள்ளது

திருமறைக் கலாமன்றத்தின் நாடக அரங்கியலுக்கான 'ஆற்றுகை'யின் 12ஆவது இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது.

ந[illegible]லை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்தரத்தக்க இந்த இதழில் [illegible]ண்ணாவியார் செபமாலை குழந்தையுடனான நேர்காணலும் மற்றும் பல பயனுள்ள நாடகவியல் தொடர்பான கட்டு ரைகளும் இடம்பெற்றுள்ளன. (து)

# அகதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி தனியார் நிறுவனங்களில்

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப் பட்ட அகதிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி யினை மத்திய வங்கி தனியார் நிறுவனங் களுக்கு வழங்கியுள்ளதாக ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்படி நீண்டகாலத் தவணையில் கடன்களை வழங்கிவரும் 46 நிறுவனங்கள் அவற்றை மத்திய வங்கியிடம் இருந்து 3வீத வட்டிக்குப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனினும், இதனை அந்த நிறுவனங்கள் 14 வீத வட்டிக்கு தனிப்பட்ட வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கியுள்ளன.

இதற்கிடையில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட தனியார் வர்த்தகர்கள் ஏற் கனவே கடன்களைப் பெற்றிருந்தால், அந் தக் கடனகளை மீள அறவிடாமல் இருக்கும் முகமாக உலகவங்கி சுமார் 5 ஆயிரம் மில் லியன் ரூபாவை மத்திய வங்கிக்கு வழங்கி யிருந்தது.

இந்த நிலையில் குறிப்பிட்ட நிதியையே மத்திய வங்கி நீண்டகாலக் குத்தகை நில வரங்களுக்கு வழங்கியுள்ளதாகவும் தக வல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்தின் போது நாடளாவிய ரீதியில் சுமார் ஒருகோடி ரூபா வரையிலான பணம் கடல்நீரால் அடித்துச்செல்லப் பட்டுள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.(க-4)

# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு விஷேட பிரிவு

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோர் மீது சட்டநடவடிக்கை மேற் கொள்வதற்கு ஏதுவாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் விஷேட பிரிவு ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

சொலிஸிட்டர் ஜெனரல் பி.ஆர்.டி.சில் வாவின் மேற்பார்வையின் கீழ் செயற்பட விருக்கும் இந்தப்பிரிவில் சிரேஷ்ட அரச சட்டத்தரணிகள் இடம்பெற்றிருக்கின்றார் கள்.

சொலிஸிட்டர் ஜெனரல் கருத்துத் தெரி விக்கையில், சமீபகாலத்தில் சிறுவர் துஷ் பிரயோக நடவடிக்கை அதிகரித்தமையே இந்த புதிய பிரிவு ஆரம்பிக்கப்படுவதற்கு காரணம் என்று தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான ஒரு சம்பவம் அறிவிக்கப்பட்டதும் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றி இந்த விஷேட பிரிவு ஆலோ சனை வழங்கும்.

சந்தேக நபர்களிற்கு எதிராக சட்ட நட வடிக்கை மேற்கொள்ளப்படுவதிலும் அது உத வியாக இருக்கும் என்றார். (க-9)

# உலகமயவாக்கலுக்கு தயாராக்கும்

(தொடர்ச்சி) ②

போர்காலத்தில் அரசாங்க சேவைகள் மற்றும் அமுலாக்கங்கள் முற்றாக பாதிப்படைந்ததினால் **(Social Harmony Component in highter education programme:2002)** இலங்கை அரசு அவற்றை அமுலாக்குவதில் ஏற்கனவே பின்பற்றப்பட்ட அனுகு முறையை தொடர்ந்தும் கடைப்பிடித்தது. இனரீதி யான முரண்பாடும் அதற்கெதிரான போரும் இலங்கை அரசாங்கத்திற்கு வாய்ப்பைக் கொடுத்தது.

இலங்கை அரசாங்கத்திற்கு வடகிழக்கின் கலவி அபிவிருத்தி ஆபத்தான ஒன்றாகக் கருதியதனால் அமுலாக்கத்தை முழுமைப்படுத்தாது செயல்பட்டது. மேற்குலகத்திற்கு தெற்கு அதிக சேவகம் செய்து அதிகமான இலாபத்தை அடையும் முயற்சியில் ஈடுபட்டதுடன் உலகத்திலிருந்து தென் இலங்கையோ வட கிழக்கு இலங்கையோ தனித்திருக்கமுடியாது என்ற நியமத்தை உலகமாற்றம் உணர்த்தியது. இதனால் வடகிழக்குப் பிரதேசக்கல்வியில் மேற்கு சார்பாக அரசசார்பற்ற அமைப்புக்கள் செயல்பட்டுவந்தன.

# புதிய கல்விச் சீர்திருத்தம்

ஆனால் அவ்வமைப்புக்களின் பிரதான நோக்கம் சுதேசமான கல்வி வளத்தையோ, அபிவிருத்தியையோ இலங்கை மக்களிடம் ஏற்படவிடாது தடுப்பதுடன் தமது தகவல் தொழில்நுட்பத்தில் தங்கியிருக்கின்ற இலங்கையாக மாற்றுவதாகவே அமைந்திருந்தது. அதுவே புதிய கல்விக் கொள்கையின் பிரதான நோக்காக விளங்குகிறது. இத்தகைய மேற்கின் நோக்கத்தை இலங்கையை ஆட்சி செய்யும் அரசாங்கங்களும் நவீனத்துவம், அபிவிருத்தி என்று கூறிக் கொண்டு செயல்படுத்தி வருகின்றது. ஆனால் இவை யாவும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு ஆளணியை திரட்டுவதுடன் அந்த நாடுகளின் உற்பத்திகளை நுகர்வதற்கான ஏற்பாடாகவே காணப்படுகின்றது. **(Nicolas Inigo carrera:2003)**

அடுத்து தொடர்ச்சியற்ற அரசாங்கங்களின் ஆட்சியினால் எத்தகைய சீர்திருத்தமும் தற்போது அமுலாக்க முடியாதுள்ளது. மாறி மாறி இரண்டு கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றினாலும் நிலையான கொள்கையை எந்தக்கட்சியும் கொண்டிருக்காதது மட்டுமன்றி ஒரு கட்சி வகுத்த கொள்கையை மறுகட்சி நிராகரிக்கின்ற அரசியல் பாணி கல்விக் கொள்கையை நிலைப்படுத்த முடியாத சூழலுக்குள் தள்ளிவருகின்றது. இதனால் புதிய கல்விக் கொள்கையை எல்லா அமைப்புக்களுக்கும், நிறுவனங்களுக்கும் சாதகமானதாக அமைக்க முயன்றபோதும் **(General Education Reforms:1997)** அரசியல் எல்லைகள், நிர்ணயங்க்ள் என்பன இலங்கையின் கல்வி வரலாற்றில் புதிய கல்விச் சீர்திருத்தத்தையும் வழமையானதொன்றாக மாற்றியது.

இது தென் இலங்கைக்கு அதிக பொருத்தம் மிக்கதாக அமைந்ததோடு வடக்கு கிழக்குக்கு சிங்கள - தமிழ் மோதலின் தொடர்ச்சியான ஒன்றாகவே விளங்கியது.

வளர்ந்த நாடுகள் வகுத்த திட்டமிடலையும் மீறி தென்இலங்கை அரசியல் சக்திகள் ஆட்சி மாற்றத்தையும், கட்சி அரசியலையும், இனமுரண்பாட்டையும் முன்னிறுத்தி வடக்கு மீதான கல்விக் கொள்கையில் பாரபட்சத்தைக் காட்டி வருகிறன்து.

வடக்குப் பிரதேசம் இரண்டுவகையான நெருக்கடியை கல்விக் கொள்கைள் தொடர்பாக எதிர்நோக்கிவருகிறது. ஒன்று தென்இலங்கை அரசுகள் காட்டும் பாரபட்சமான அணுகுமுறையோடு அரசியல் உள்நோக்கங்களைக் கொண்டு புறக்கணிப்புகளை கையாளுகின்றமை ஆரம்பக்கல்வியிலிருந்து உயர்கல்வி வரை வசதிவாய்ப்புக்களற்ற, அமுல்படுத்தலற்ற முன்பின் முரண்பாடான பிரயோகப்படுத்தலினூடாக பாதிப்பினை ஏற்படுத்தி வருகிறது. கல்வித் தேவ்வகளை உரிய காலத்தில் நிறைவேற்றாத போக்கும் போதிய தொழில்தகமைக்கு வழிகாட்டாத தன்மையும், வடக்கு பிரதேசம் பாதிப்புக்குள்ளாக காரணமாகின்றது.

சாதாரணமாக பல்கலைக்கழக அனுமதியில் காட்டப்படும் பாரபட்சத்தையும் குழறுபடியையும் பின்வரும் தகவல் எடுத்துக்காட்டுகின்றது.

| யாழ்.மாவட்டத்தில் பொறியியல் துறைக்கு அனுமதிபெற்ற மாணவர்களின் சதவீதம் (கோட்ட ரீதியாக) | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு | உண்மையாக எடுக்கப்பட்டது | எண்ணிக்கை அடிப்படையில் எடுக்க வேண்டியது | சதவீத அடிப்படையில் எடுக்கவேண்டியது | இலங்கை முழுவதுமான மா.கோ.எண் |
| 1993 / 1994 | 42 | 42 | 42 | 485 |
| 1994 / 1995 | 23 | 42 | 39 | 452 |
| 1999 / 2000 | 34 | 42 | 45 | 521 |
| 2000 / 2001 | 33 | 42 | 49 | 571 |
| 2001 / 2002 | 34 | 42 | 51 | 584 |
| 2002 / 2003 | 36 | 42 | 50 | 577 |
| 2002 / 2003 (A) | 37 | 42 | 50.1 | 580 |
| 2003 / 2004 | 27 | 42 | 50.1 | 580 |

இரண்டாவது உலகமயப்படுத்தலுக்கான தயார்ப்படுத்தலை எதிர்கொள்கின்ற நெருக்கடிக்கு வடக்கு கிழக்கு முகங்கொடுக்கின்றது. இது பிரித்தானியர் காலத்திலிருந்து நிகழ்ந்து வந்தாலும் இடைப்பட்ட காலத்தில் சுதேச மொழி, சுதேச பொருளாதாரம் என்பன உலக மயவாக்கத்திற்கு எதிரானதாக வடகிழக்கை மட்டுமல்ல இலங்கையையும் மாற்றியிருந்தது. ஆனால் மீண்டும் புதிய கல்விச் சீர்திருத்தம் என்ற போர்வையில் தயாராகும் கல்விக் கொள்கை சுதேசமொழி, பண்பாடு, விழுமியம் என்பவற்றை நிராகரிக்கவும் மேற்கு உருவாக்கிவரும் தகவல் பொருளாதாரத்திற்கு இசைவாக தயாராக்கும் போக்கு ஆபத்தானதாக நோக்கப்படுகின்றது. எனவே புதிய கல்வி சீர்திருத்தத்தை பிரயோகிக்கும் ஒவ்வொரு சந்தர்பத்திலும் அதனால் ஏற்படும் அரசியல் ஆபத்துக்களை புரிந்துகொண்டு செயல்படுவதே பொருத்தமான பிரயோகமாக அமையும். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை **(ISGA)**யின் கட்டமைப்புக்குள் மாற்றத்தை ஏற்படுத்தும்போது உலகமயப்படுத்தலின் அரசியல் உள்நோக்கங்களை புரிந்துகொண்டு கல்விக் கொள்கையை சரிவர அமுலாக்கமுடியும். வடக்கு கிழக்கு பிரதேச கல்விக்கான மாற்றுக்கொள்கையொன்றை வரைபுக்கும், ஆய்வுக்கும உட்படுத்துவது அவசியமானதாகும்.

**கே. ரீ. கணேசலிங்கம்**

## வட - கிழக்கு பற்றிய ஒரு நோக்கு

*-நன்றி: கல்வியியலாளன்.*

# பேரலையால் அழிந்த முல்லை புதுப்பொலிவுடன் உருவாகும்

(முல்லைத்தீவு)

எமது மக்கள் படுகின்ற துன்பங்கள் - துயரங்கள் - வேதனைகளைப் பார்க்க முடியாமல் கதறி அழுகின்றோம். காயப்பட்ட எமது உடன் பிறப்புகள் உப்புநீரிலே கிடந்து துடிதுடித்த காட்சி தாங்க முடியாத ஒன்று. அதனாலேயே காயப்பட்டவர்களை உடனடியாக மீட்டெடுத்தோம்.

சுனாமி பேரழிவின் 31ஆம் நாள் நினைவைக் கொண்டாடு முகமாக உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட முள்ளியவளை கர்ப்பூரப்பல்லு வெளியில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தின் போது இரங்கல் உரை ஆற்றிய வன்னிட் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் மேற கண்டவாறு தெரிவித்தார்.

முல்லை மாவட்ட பேரொளிக் குழுவின் செயலாளர் க.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் பொதுச் சுடரினை கரைதுரைப்பற்று பிரதேச சபையின் விசேட ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை ஏற்றிவைக்க, முல்லைக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் பிரியந்தன் தேசியக் கொடியை ஏற்ற, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் மலர்மாலை அணிவிகக, சிவனடியார் மலர் அஞ்சலியை தொடக்கிவைக்க, முல்லைத்தீவு புனித அந்தோனியார் தேவாலய குருவானவர் ஜேம்ஸ் பத்திராசர் இரங்கல் உரை நிகழ்த்தினார்.

இவ் அஞ்சலி நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கனகரத்தினம இராணுவத்திடம் இருந்து முல்லை நகரை மீட்டெடுத்த எமது போராளிகளால் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் முல்லை நகரம் புதுப்பொலிவுடன் புதிய நகரமாக உருவாக்கப்பட்டுக்கொண்டிருந்த வேளையிலே ஏற்பட்ட இப்பேரனத்தத்தின் விளைவால் முல்லைத் தீவு ஒரு மயான பூமியாகிவிட்டது.

இங்கே வாழ்ந்த மக்கள் உற்றாரை, உறவினரை, மட்டுமல்ல; கணவனை, மனைவியை, குழந்தைகளையெல்லாம், இழந்து துடிக்கின்றாகள். அவர்களது உள்ளக் குமுறலைத் தணித்து அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லி அவர்களுடன் கூடவே இருந்து அவர்களைத் தேற்ற வேண்டிய பாரிய பொறுப்பும் பேரலையால் அழிந்த முல்லையைப் புதுப்பொலிவுடன் மீள உருவாக்கும பொறுப்பும் பொதுமக்களாகிய உங்கள் கையிலே தான் தங்கியிருக்கிறது.

இப்பேரனர்த்தத்தின் போது கடல் புலிகளின் தளபதி சூசை தலைமையிலான கடல் புலிகள் மீட்புப் பணியில் காட்டிய வேகத்தால் எத்தனையோ உயிர்கள் பாதுகாக்கப்பட்டன.

இப்பேரனர்த்தத்தைக் கேள்விப்பட்டதும் அயல் கிராமங்களில் உள்ள மக்கள் தங்கள் வாகனங்களையெல்லாம் கொண்டுவந்து மீட்புப்பணியில் ஈடுபட்டது. எங்கள் ஒற்றுமையை, உறவைப் பலப்படுததுகின்றது.

வன்னிப் பா.உ கனகரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில் முல்லைத்தீவு நகரம் அழிந்துவிட்டது எஞ்சிய மக்கள் எல்லாம் நிர்க்கதியாக்கப்பட்டுவிட்டார்கள் என்றெல்லாம் கேள்விபட்டவுடன் தெற்கிலேயுள்ள மக்கள் சகலவேற்றுமையையும் மறந்தார்கள். சிங்கள, முஸ்லிம் மக்கள், மலைய மக்கள் தமிழ் மக்கள் எல்லோரும் ஓடோடி வந்தார்கள். உதவிக்கரம் நீட்டினார்கள். உணவுப் பொருட்களையும் உடுபுடவைகளையும் வாரி வழங்கி நிர்க்கதியான மக்களை தேற்றினார்கள்.

இது வரலாற்றில் எமக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளது. அதுமட்டுமல்லாமல் பாதிககப்பட்ட பிரதேசமான திருகோணமலையில் இருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும் உதவிகள் வந்து குவிந்தன.

இங்கேயுள்ள எம் மக்களுக்கு இன்னல் நேர்ந்தவுடன் சிங்களவர்களும் முஸ்லிம்களும் நேசக்கரம் நீட்டியது வரலாற்றுப் பெருமை மிக்க ஒரு செயலலே எனக் கூறினார்.

முல்லை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் முகுந்தன் நடுவப்பணியக உறுப்பினர் பிரேமன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (து-128)

# இலங்கைக்கு நிபுணத்துவ உதவிகளை வழங்க பொதுநலவாய நாடுகள் ரணிலிடம் உறுதி

(கொழும்பு)

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு பொதுநலவாய நாடுகள் நிபுணத்துவ அறிவை இலங்கைக்கு வழங்குமென பொதுநலவாய அமைப்பின் பொதுச்செயலாளர் டான் மைக்கினன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

பொதுநலவாய அமைப்பின் பொதுச செயலாளர் டான் மைக்கினை எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க லண்டனில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

ஆழிப் பேரலைகளின் பாதிப்புகளிலிருந்து இலங்கையை மீளக் கட்டியெழுப்புவது குறித்தும் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கையை சுமூக நிலைக்கு கொண்டு வருவது குறித்தும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பொதுநலவாய அமைப்பின் செயலாளர்,



பல துறைகள் சார்ந்த விடயங்களில் இலங்கைக்கு வழக்கப்படவுள்ள நிபுணத்துவ ஆலோசனைகளுடன் அவற்றுக்கு தேவையான வழிமுறைகளும் முன்வைக்கப்படும்.

பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாடொன்று அனர்த்தத்தில் சிக்கியுள்ள போது உடனடி நிவாரணங்களை வழங்குவதை விட அதனைக் கட்டியெழுப்புவதற்கு உதவுவதே சாலச் சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார் (ப-08)

# மகளிர் அபிவிருத்தி நிலையம் மாணவர்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

'மகளிர் அபிவிருத்தி நிலையம மாணவர் கல்வி ஊக்குவிப்புத்' திட்டத்தின் கீழ் நயினாதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயம், நயினைதீவு ஸ்ரீ கனிஸ்ட மகாவித்தியாலயம், நயினாதீவு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களிற்கு கொப்பி, சிறுவர்களிற்கான பயிற்சி புத்தகம், புத்தகப்பை ஆகய உபகரணங்களும் ஆண்களிற்கான சேட், காற்சட்டை ஆகிய தைத்த ஆடைகளையும் ஓட்டுமடத்திலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிமனையில் வைத்து வழங்கியது.

இவ்வுபகரணங்களைப் பெறத் தகுதி வாய்ந்த மாணவர்களை குறிப்பிட்ட பாடசாலை அதிபர்கள் தெரிவு செயது அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

# ஆரோக்கிய வாழ்வும் நோயணுகா முறையும்

## மருத்துவ விளக்கம்

மனிதன் ஆரோக்கியமாக நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்கு, போஷாக்குள்ள உணவுகளை உணபதோடு நோயணுகா முறைகளைக் கடைப்பிடித்து மன அமைதியுடனும் வாழ்தல் அவசியமாகும்.

போஷாக்குள்ள உணவு என்றால், தாவர உணவு மிக முக்கியம். மனிதன் இறைவனால் படைக்கப்பட்ட பொழுதே அவனுக்குத் தேவையான உணவு வகைகளும், இறைவனால், படைக்கப பட்டுவிட்டது. மாமிஷ உணவும் நாம உண்பது வழக்கம். ஊணை த தின்று ஊணைப் பெருக்கேல் என்ற விதிமுறைக்கமைய மாமிஷ உணவு நோயுள்ள உடலில் நோயைப் பெருக்கும். நோயற்ற உடலல் (ஊண) தசையைப் வளர்க்கும்.

ஆயினும் தாவர உணவு இளம்துளிராகக் குளிர்ச்சியாக வளர்வது போல் எமது உடலையும் துளிராக குளிர்ச்சியாக வளர வைப்பதோடு, ஆரோக்கியத்தையும், பாதுகாக்கும். அத்தோடு நோய் அணுகாமல் எதிர்ப்புச் சக்தியையும் (Immunily Powen) அளிக்கும்.

மேலும் தலைமையில் கண், பல், என்பு (Bonn) போன்ற அவயவங்களைப் பாதுகாத்துப் பழுதடைந்த உடல் உறுப்புக்களைப் புதுப்பிப்பதோடு அஜீரணம், குடல கிருமிகள், மலபந்தம், மூலம், விரணம, கட்டி, தோல் நோய், சுரம், கசம் (Cough) தலைவலி, இருதய ரோகம், சலரோகம் (Dia ve les) வாய்ப்புண், குடல்புண், கொழுப்பு (Colostnol) உடல் எடை, வீக்கம் (Odema) சிறு நீர்கக்றகள் போன்ற நோய்களையும் கண்டித்து உடலில் நோய் அணுகாமல் பாதுகாக்கும் சக்தி தாவர உணவிற்கு உள்ளது என்பது அசைக்கமுடியாத உண்மை.

உலகில் அனைத்து நாடுகளிலும் மனிதன் தோனறிய காலம் தொட்டே மூலிகைகளின் மூலம் நோயகளைக் குணமாக்கி வெற்றி கண்டுளளனர். உ - ம் : இந்தியா, சீனா, ஜப்பான்.

எனவே போஷாக்குள்ள தாவர உணவை அளவறிந்து உண்டு ஆரோக்கியமாகவும், நீண்ட ஆயுளுடனும் வாழலாம்

களைப புதுப்பிக்கும். உடலில உள்ள கலங்களில் (Cell) ஊடுருவி கலஙகளில் உள்ள நசசுத் தன்மையை அகற்றி இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். மலசலங்களை வெளியேற்றி இயற்கைக் கழிவு களைச் சீர்செய்யும்.

மூடடுக்களில் (Joints) இருக்கும் வலி ,வேதனை, வீக்கம், நிற மாற்றம் போன்ற குறிகுணங்களை (Sign and Symtom) களைந்து உடலை மினுமினுப்பாக்கும். விஷக்கடிகளை (Posion) போககும் சக்தி தாவர (மூலிகை) உணவுக்கு உண்டு. இதனால் மனிதனை இறப்பில் இருந்தும் காப்பாற்றுகின்றது.

மேலும் உடலில் ஏற்படும் ஒவ்வாமை (Alengy) ; யை தவிர்ப்பதோடு மன அழுத்தம், இரத்த அழுத்தம் (B.P), மூளைக் கோளாறு போன்ற தாக்கங்களைக குறைத்து மனசாந்தியை கொடுககும் சக்தி தாவர உணவிற்கே உண்டு.

தாவர உணவு உயிர்ச்சத்து (Vitamin) மிக்கதும் இலகுவில், ஜீரணிக்கும் தன்மையுமுள்ளது.

மேலும் எமது வாழ்வில் வெவ்வேறு சம்பவங்கள் ஏற்படும் போது எம் மனதில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றது. உ-ம்: சந்தோஷம், பயம், துக்கம் இதனால் பசியின்மை, தூக்கமின்மை, இருதயப் படபடப்பு, மன ஊழைச்சல் போன்ற மாற்றங்கள் உடலில் ஏற்படுகின்றது. இந்த மாற்றங்களால் ஏற்படும் உடல், உள மாற்றங்கள் அந்தந்த நேரங்களில் நம்மை இயல்பு நிலையில் நின்றும மாற்றங்களை வெளிக் காட்டாது இருக்கலாம். ஆனால் இச் சநதர்ப்பங்களில் நாம் மன அமைதி பெறவேண்டும் என்ற உணர்வை (Emotion) தூண்டுகினறது. அந்நேரத்தில் அதற்கான வழிமுறைகளைக் கடைப்பிடித்தல் அவசியம்.

இவ்வுடல் உள மாற்றங்கள் ஏற்பட்ட காலத்தில் நாம் முன்கள் காணுமிடத்து முதலில் நாம கடைபபிடிக்கவேண்டியது மருந்து அல்ல, மன அமைதி பெறும வழி முறைகளைக் கடைப்பிடித்தல் ஆகும்.

உடல் உளரீதியாக ஏற்படும் மாறறங்கள் உடனுக்குடன் தாக்கத்தை வெளிப்படுத்தா விட்டாலும அச் சம்பவங்கள் முடிநது பல காலத்திற்குப் பின்னரும் எம்மில் மாற்றங்களை ஏறபடுத்தி பாரிய பாதிப்பை ஏற்படுத்தலாம்.

இவ்வாறான நிலைமை ஏற்படாமல் தவிர்ப்பதற்கு மன அமைதியைப் பேணக்கூடிய வழிமுறைகளான யோகாசனம், மந்திர உற்சாடனம் (ஜபம்) தியானம் (Medilation) சுவாசப் பயிற்சி போன்ற முறைகளைக் கடைப் பிடித்தல் நல்லது.

இந்த வழிமுறைகளைப் பின் பற்றத் தேர்ச்சி பெற்ற ஆசானை நாடவேண்டும். 'குருவில்லா வித்தை பாழ் என்னும் பொய்யா மொழிக் கிணங்க எந்தவொரு வித்தை யையும் ஆசான் வழியில் நின்று கற்றல் சாலச்சிறந்ததாகும்.

யோகம், தியானம், ஜபம் இம் மூன்று வழிமுறைகளையும கடைப்பிடிப்பதற்கு அமைதியான காற்றோட்டமுள்ள இடமாக இருத்தல் வேண்டும். காலை , மாலை அரைமணிநேரம் இரு முறை செய்தல்வேண்டும். இவ் வேளையில் இறுக்கமில்லாத தளர்வான ஆடைஅணிதல்வேண்டும். அதிகாலையில் உணவு எடுக்க முன்னரும், மாலையில் உணவு அருந்தி ஒரு மணித்தியாலத்தின் பின்னரும் இப்பயிற்சிகளைச் செய்தல் உகந்தது. எந்ந நிலையிலும் அமைதியான தளர்வான உடல் நிலையில் செய்தல் முக்கியம். கடும் முயற்சி அல்லது அவசரத்தில் செய்து முடிக்க வேண்டுமென்ற மனநிலையில் செய்தல் ஆகாது. இவற்றில் ஓரளவு தேர்ச்சி பெற்ற

கும போது சுவாசப் பயிற்சி அல்லது மந்திர உற்சாடனத்தைச் செய்து மன அமைதிபெறலாம். இவ் நாளாந்தப் பயிற்சியில் உடலும், உள்ளமும் ஆரோககியம் பெறும்.

சுவாசப் பயிற்சி மன அமைதியற்ற நிலையில் செய்தால் சுவாசம் ஒழுங்கற்ற, ஆழமற்றதாகக் காணப்படும். சுவாசப் பயிற்சி மார்பகத்திற்கு மாந்திரமல்ல, வயிற்றுத் தசைகளையும் இறுக்க மற்ற தளர்வு நிலையை ஏற்படுத்தும். எனவே மன அமைதியற்ற சூழலில் சுவாசப் பயிற்சி செய்தால் உடல் ரீதியாக மாற்றங்களை ஏற்படுத்தும். மன அமைதியான சூழலில் சுவாசப் பயிற்சி செய்தால் உடல் உள மாற்றங்களைச் சீர்செய்து மன அமைதியை ஏற்படுத்தும்.

சுவாசம் உட்செல்வதையும், வெளிச் செல்வதையும் அவதானிக்கவேண்டும். சுவாசத்தை உள்ளெடுக்கும் போது மெதுவாகவும், ஆழமாகவும் தொடர்பாகவும் எடுக்கவேண்டும். படிப்படியாக உள்ளெடுக்கும் நேரத்தையும், வெளிவிடும் நேரத்தையும் அதிகரிக்கலாம்.

எநதப் பயிற்சியையும் செய்ய முன்னர் உடலைத் தளர்வு நிலைககுக் கொண்டு வருதல் வேண்டும். இதற்கு மல்லாந்த படுத்து உள்ளங்கையிலிருந்து உச்சம் தலை தலைவரை தளர்நிலையில் வைத்திருத்தல் அவசியம். பின்னர் ஒவ்வொரு அங்கங்களையும் சிறிது சிறிதாக அசைத்து பின் எழுந்திருத்தல் வேண்டும்.

இதன் பின் மந்திர உற்சாடனம் (ஜபம்) ஒவ்வொரு சொற்களாகத் தொடர்ந்து திரும்பத் திரும்ப உச்சரித்தல் வேண்டும். இதனால் மன அமைதி ஏற்படும். உச்சரிக்கும் சொல் படிப்படியாக வாயாடாமல் மனதிற்குள் சொல்லும் ஆற்றல் பெறவேண்டும்.

பின்னர் தியானம் இதற்கு முன்னர் கூறியது போல் வசதிக்கு ஏற்ற நேரம் இடம் ஆசனம் முக்கியம் நேராக இருத்தல் அவசியம். நாள்தோறும் ஒரேநேரத்தில் ஓரேஇடத்தில் செய்தல்

வேண்டும். இதனை அமைதியாக ஒரு வழிப்படுத்தவேண்டும். அவசரமாகவோ, கஷ்டப்பட்டோ ஒரு நிலைப்படுத்தக் கூடாது. சுவாசம் நாம் உயிர்வாழ்வதற்கு ஆதாரமாக இருக்கின்றது. ஆகவே சுவாசத்தின் பலமே நமது உயிர்ப் பலம்.

மேலும் சுகந்த தூபம் சாம்பிராணி, சந்தனம், கஸ்தூரி மஞ்சள, இளங்கா பத்திரி, தேவதாறு, அகில், ஓமம் போன்ற பொருட்களால் தூபமிடுவதால் காற்றுத தூய்மையாகி விஷைக் கிருமிகளும் அகலும்.

தூயசிந்தை உயரிய நோக்கம் அடக்கமும், ஆண்மையும் உடையவனாய் இருந்து, சுகாதார முறைகளைக் கடைப்பிடித்து முன்கூறிய உணவு முறைகளையும் கைக்கொண்டால் நோய் அணுகாது. ஆரோக்கியத்துடனும நீண்ட ஆயுளுடனும் வாழலாம்.

பயனுள்ள புத்தகங்களை வாசித்தல், உரிய நேரத்தில் நித்திரைக்குப் போதல், நல்லறிவாழர்களுடன் உரையாடுதல், நல் ஆரோக்கியத்திற்கு உகந்த வழி முறைகளாகும்.

முக்கியமாக அஜீரணம், மலச் சிக்கல, தேக அப்பியாசக் குறைவு, நல்ல பொழுது போக்கின்மை, மூளைக்கும் கண்களுக்கும் அதிக வேலை, வெய்யிலின் தாக்கம், பழுதடைநத உணவு வகைகளை உண்பது, தேயிலை, கோப்பி, மது, புகையிலை போன்ற உணவுகளால் ஏற்பட்ட நச்சுத்தன்மைகளின் சேர்க்கை மிதமிஞ்சிய போகம் செய்தல்,வேகம் (Fmo tion) கொள்ளல், நரம்புப் பலவீனம் இன்னும் பல காரியங்களாலும் தலையிடி ஏற்படலாம். தலையிடி ஒரு நோயின் குறியே அன்றி தலையிடி ஒரு ரோகம் அல்ல. எனவே தலையிடி ஏற்படும் கார ணத்தை அறிந்து அதனைத் தடுபபதற்கு ஏற்ற பரிகாரம் செய்தல் வேண்டும்.

Dr திருமதி நா.புருஷோத்தமன்
(டி.ஏ.எம்)

**மருந்த என வேண்டலாம் யாக்கைக்கு**
**அருந்தியது அற்றது போன்றியுனின்**

**.உடம்பினை முன்மை இழக்கென்றிகழ்தேன்**
**உம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டானென்று**
**உடம்பினை யானிருந்தோம்**

சீனா, ஜப்பான்.

எனவே போஷாக்குள்ள தாவர உணவை அளவறிந்து உண்டு ஆரோக்கியமாகவும், நீண்ட ஆயுளுடனும் வாழலாம் என்பது திண்ணம்.

தாவர உணவில் நோய் எதிர்ப்பு சக்தி **(Immunity Powen)** இருப்பதோடு உடலைப் பலப்படுத்தும் **(Enenrgy)** சக்தியும் உண்டு. தேய்ந்த உறுப்புக்

வழிமுறைகளைக் கடைப்பிடித்தல் அவசியம்.

இவ்வுடல் உள மாற்றங்கள் ஏற்பட்ட காலத்தில் நாம் முன் ஏற்பாடாக, நடந்து கொள்ளாவிட்டால், எமது உடல் ரீதியாகவோ, மனரீதியாகவோ நோய் அதிகரித்து ஆரோக்கியம் குன்றி ஆயுளும் குறைவடையலாம். எனவே முன் கூறிய குறிகுணங்

அல்லது அவசரத்தில் செய்து முடிக்க வேண்டுமென்ற மனநிலையில் செய்தல் ஆகாது. இவற்றில் ஓரளவு தேர்ச்சி பெற்ற பிறகு மற்ற இடங்களிலும் நேரங்களிலும் தேவைக்கேற்ப ஒன்றை அல்லது எல்லாவற்றையும் செய்யலாம். உ-ம்: நெருக்கமான சூழலில் அல்லது பயங்கரமான சூழலல் அல்லது ஓய்வாக இருக்

கியம் நேராக இருத்தல் அவசியம். நாள்தோறும் ஒரேநேரத்தில் ஒரேஇடத்தில் செய்தல் நன்று. தியானிப்பதற்கு ஒரு தெய்வம். அல்லது ஒரு தீபத்தைத் தேர்ந்தெடுத்தல் நன்று. (ஏதாவது ஒரு பொருள்) மனம் வேறு திசையில் செல்லாது ஒரு முகப்படுத்தி நீங்கள் தேர்ந்தெடுத்த பொருளில் தங்கப்பழக்க

**உடம்புள்ளே உத்தமன்**
**கோயில் கொண்டானென்று**
**உடம்பினை யானிருந் தோம்**
**புகின்றேனே (திருமந்திரம்)**

எனவே தேகாரோக்கியத்தின் அவசியத்தை அறிந்து சுகாதார விதிகளைக் கடைப்பிடித்து நோய் அணுகாது ஆரோக்கியத்துடனும் வாழ்ந்து இயற்கை இன்பத்தை அனுபவித்தல் நன்று. □

# சர்வதேச பாடசாலையின் ஓராண்டு நிறைவு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அமைக்கப்பெற்று, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும சர்வதேச ஆங்கிலப் பாடசாலையின் ஓராண்டு நிறைவு விழா கடந்த சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் பாடசாலையின் பணிப்பாளரும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கல்வி அபிவிருத்திக்கான பணிப்பாளரும் ஆகிய ச.ராஜகோபால் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, தமிழீழ தேசியக் கொடியேற்றப்பட்டதையடுத்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினதும், பாடசாலையினதும் கொடிகள் ஏற்றப்பட்டன.

தொடர்ந்து இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழர் புனர்வாழவுக் கழகத்தின் சிறுவர் நல ஒருங்கிணைப்புப் பணிப்பாளரான ரவியும், பிரதம விருந்தினராக முன்பள்ளிகளுக்கான வலயக் கல்விப் பணிப்பாளர் சிவநாதனும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விழா நிகழ்வில் சிறப்புரையினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கல்வி அபிவிருத்திக்கான பணிப்பாளரும், சர்வதேச பாடசாலையின் பணிப்பாளருமான ச.ராஜகோபால் நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்நிகழ்வுகளுக்கிடையில் ஆழிப்பேரலை அனரதத்தினால் சாவடைந்த இப் பாடசாலையில் கல்வி கற்றுவந்த மாணவனான செல்வன் திலக்ஷனுக்கு அகவணக்கமும் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# நிவாரண விநியோகத்தில் பாகுபாடு; மக்கள் போராட்டம் வெடிக்குமாம்

## எச்சரிக்கிறார் சிவசக்தி ஆனந்தன்

சுனாமிஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென சர்வதேச சமூகத்திடமிருந்து கிடைத்துள்ள உதவிகள் வடக்கு - கிழக்கில் எமது பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ்மக்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை.

இந்நிலை தொடருமானால் உதவிகளை பெற்றுக்கொள்ளும் வகையில் மக்கள் போராட்டம் வெடிக்கும் என வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் 41 வது நாள் நினைவு நாள் நேற்று செட்டிகுளம் பிரிவில் நேரியகுளம சிறீசித்தி விநாயகர் ஆலயத்தில இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இவ் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாடும் போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

எங்களுடைய வடக்கு-கிழக்கு கரையோர மாவட்டங்கள் பெரிதும ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ளது. உலக நாடுகளிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கென பெருமளவு உதவிப் பொருட்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றது.

ஆனால் அவை யாவும் தெற்கே உள்ள மக்களுக்கே விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. பாதிக்கப்பட்ட எங்களுடைய தமிழ் மக்களுக்கு கிடைத்துள்ள சர்வதேச சமூகத்தின் உதவிகளை பகிர்ந்தளிக்க அரசு இனியும் நடவடிக்கை எடுக்கத்தவறின் எமது மககள் பொங்கி எழுந்து போராட்டஙகளை நடத்த வேண்டிய சூழநிலை ஏற்படும் எனவும் அவர் தொிவித்தார்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், வினோ நோகராதலிங்கம், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் உட்பட பலர் இந்நிகழ்வில் உரையாற்றினார்கள். (க-4)

# பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் விவகாரத்தில் அரசின் போக்கு தமிழ் மக்களை மோசமாகப் பாதிக்கும்

## ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்க்கு இளம்பரிதி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப பினர் றொபோட் ஈவன்ஸ்க்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதிக் குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முற்பகல் யாழ்.மாவட்ட



அரசியல்துறை செயலகத்தில் இடம்பெற்றது.

சுமார் 3மணிநேரம் இடம் பெற்ற இச்சந்திப்பின்போது,

சுனாமி கடற்பேரனர்த்தங்க ளால் யாழ்.குடாநாட்டு மக்க ளுக்கு ஏற்பட்ட இழப்புகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிவழங்கல், பாதிககப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புதல் என பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட அரசி யலதுறைப் பொறுப்பாளர் சி.இளம் பரிதி,

சிங்களப் பேரினவாதிகளால் பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுப்பதற்காகப் போராடி வரும் தமிழினத்தினது போராட்ட நியாயங்களை ஐரோப்பிய நாடா ளுமன்றம் ஏற்றுக்கொண்டுள் ளமை வரவேற்கத்தக்கது.

தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராடி வரும் புலிகள் இயக்கமானது பேரினவாதிகளால் பிரசாரப்படுத் தப்படுவதுபோல் ஒரு பயங்கர வாத இயக்கம் அல்ல.

இது முற்றுமுழுதாக தமிழ் மக்களது ஆணையைப் பெற்ற ஓர் விடுதலைப் போராட்ட அமைப்பு. தமிழ் மக்களை அன்று தொடக்கம் இன்றுவரை பேரினவாத அரசாங்கம் புறக் கணித்தே வருகிறது. தமிழர் களை அடக்கியாள முனைகி றது. இதன் விளைவாகவே எமது போராட்டம் வலுப் பெற் றது.

இந்த போராட்டஙகள் தற் பொழுது ஓய்ந்து நிரந்தர அமை திக்கான முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்ற போதும், அரசு அண்மையில் ஏறபட்ட சுனாமி அனர்த்த நிவாரண உதவி களில் தனது கடும் போக்கான வஞ்சனையை வெளிப்படுத்தி யுள்ளது.

சர்வதேச நாடுகளால் பாதிக் கப்பட மக்களுக்கென வழங கப்பட்ட நிதிஉதவிகளைக்கூட தமிழ் மக்களுக்குக் கிடைகக விடாது தநதிரமாக திசைதிருப் பும் முயற்சிகளில் அரசு ஈடு பட்டுவருகிறது.

பாதிக்கப்பட்டவர்கள் சமா தானத்தையும், புனர்வாழ்வை யும் எதிர்பார்த்து நிற்கும் இந் தக் காலகட்டத்தில் அரசாங் கம் சர்வதேச உதவிகளை முடக்கி இராணுவ நலன்களை மையமாகக்கொண்டு செயற் பட்டு வருகின்றமை மக்களி டையே அதிருப்தியை ஏற்படுத் யுள்ளது.

மக்களின் மனிதாபிமான தேவைகளை புறம்தள்ளிவிட்டு தறபோதைய இக்கட்டான சூழ் நிலையலும் அரசியல் இராணுவ நலன்களை மையமாகக்கொண்டு செயறபட்டு வருகின்றமை அரச பயஙகரவாதத்தின மனிதாபிமான மறற வெளிப்பாட்டை உணர்த் துகிறது.

இநநிலையில் தான் அரசின் மீது நம்பிக்கை இழந்த நாம் தமிழ்பிரதேசத்திற்கான சர்வ தேச உதவிகள் நேரடியாகவே கிடைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறோம்.

இதற்காகவே புலிகளின் தலைமை சர்வதேச உதவிகளை சரியானமுறையில் பங்கிட்டு வழங்குவதற்கு ஏற்ற பொதுக் கட்டமைப்புப் பற்றிய யோசனை ஒன்றை சர்வதேச சமூகத்தினூ டாக அரசிற்குத் தெரிவித்தி ருந்தது.

அதனை ஏற்காத அரசு பொதுக் கடடமைப்பை உருவாக்கும் விவ காரத்தில் இழுத்தடிப்புக்களைச் செயது வருகின்றது. இது எமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள் ளது.

உதவிகளைப் பங்கிடுவதற் கான பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதில் அரசு மேற் கொள்ளும் இழுத்தடிப்பு நடவ டிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேச உதவிகளை அனுபவிக்க முடியாதநிலை ஏற் படககூடிய அபாயகரமான சூழ் நிலை உள்ளது எனத் தெரி வித்தார். (ப)

## தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்த சவுதியில் மத்தியநிலையம்?

(கொழும்பு)

சர்வதேச தீவிரவாதிகளைக் கடடுப்படுத்தும் மத்திய நிலைய மொன்றை சவுதி அரேபியாவில் நிறுவுவது தொடர்பாகக் கலந் தாலோசிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் நடை பெறும் தீவிரவாதத்தைக் கட் டுப்படுததும் மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகள், இந்த யோச னையை அந்நாட்டு அரசிடம் முன்வைத்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை உட்பட 48நாடு களைச் சேர்ந்த பிரதிநிதிகள் 4 நாட்கள் நடைபெறும் இம் மாநாட்டில் கலந்துகொள்கின் றனர்.

இலங்கை சார்பில் சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் இப்ராஹிம் அன்சார் இம் மாநாட்டில் கலந்துகொள் வது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-7)

## வி.பி. முத்தரப்புக் கிண்ணத்தை ஆஸி. அணி வென்றுள்ளது

அவுஸ்திரேலியாவில் நடை பெற்ற அவுஸ்திரேலியா, பாகிஸ்



தான், மேற்கிந்திய தீவுகள் அணிகள் பங்குபற்றிய வி.பி. கிண்ண முத்தரப்பு ஒருநாள் தொடரில் இரண்டாவது இறு திப் போட்டியிலும் அவுஸ்தி ரேலிய அணி 31ஓட்டங்கள்ால் பாகிஸ்தான் அணியை வென் றதன் மூலம் கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.

சிட்னியில் நடைபெற்ற இப் போட்டியில் ஆஸி. அணி 50 ஓவர்களில் 239ஓட்டங்களை எடுத்தது. கிளார்க்-38, கில் கிறிஸ்ட்-40, பொன்டிங்-41, மார்டின்-43 ஓட்டங்களை எடுத் தனர்.

கடைசி ஓவரில் நவீட்-உல் ஹசனுக்கு ஹட்ரிக் வாய்ப்புக் கிடைத்தபோதும் மெக்ராத் சாமளித்து ஆடியதால் அந்த வாய்ப்புத் தவறியது.


தொடாந்து 240 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய பாகிஸ் தான் அணி 45.4 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 208 ஓட்டங்களை மாத் திரமே எடுத்தது.

யூசுப் யுகானா 51ஓட்டங் களைப் பெற்றார். அடுத்தடுத்து விக்கெற்றுக்கள் சரிய ஒரு கடடத்தில் பாகிஸ்தான் 6 விக் கெற்றுக்களை இழந்து 97 ஓட் டங்களை மாத்திரமே எடுத்தி ருந்தது.

ஆயினும் அவரிடி 31 ஓட்டங் களையும், ரஷாக் 43 ஓட்டங்க ளையும் எடுத்ததன் மூலம் ஓர ளவு ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். மக்ராத் 5 விக் கெற்றுக்களைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கதாகும்.

முதலிரு இறுதிப் போட்டி களிலும் ஆஸி. அணியே வெற்றி பெற்றதால் கோப்பையை அதுவே வென்றுளளது. மூன்றாவது போட் டிக்கு அவசியமில்லாமல் போனது.

இப்போட்டியின் ஆட்ட நாயக னாக மெக்ராத்தும் தொடர்



நாயகனாக பிரட்லீயும் தெரிவு செய்யப்பட்டனர். (து-7)

## நான்காவது ஒருநாள் போட்டி தென்னாபிரிக்கா வெற்றி

இங்கிலாநதுக்கும் தென்னா பிரிக்காவுக்கும் இடையே நியூ லன்ட் மைதானத்தில் நடை பெற்ற நான்காவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் 108 ஓட்டங்களால தென்னாபிரிக்கா வெற்றிபெற்றுள்ளது. இதன் மூலம் 7 போட்டிகள் கொண்ட இத தொடரில் 2:1 என்ற அடிப் படையில் தென்னாபிரிக்கா முன் நிலையிலுள்ளது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபி ரிக்கா 50ஓவர்களில் 5 விக் கெற்றுக்களை இழந்து 291 ஓட் டங்களை எடுத்தது. கிப்ஸ் 100 ஓடடங்களையும் ஜக்கலிஸ் 71 ஓட்டங்களையும் கெயின்ஸ் 57 ஓட்டங்களையும் பெற்றனர்.

இங்கிலாந்து அணி 41.2ஓவர் களில் சகல விக்கெற்றுக்களை யும் இழந்து 183 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. துடுப்பாட் டத்தில் பீற்றர்ஸன் 75ஓட்டங் களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மக்கயா நிற் றனி 3 விக்கெற்றுக்களையும், ஷேன்பொலக், நிக்கிபோயே ஆகியோர் தலா 2 விக்கெற் றுக்களையும் வீழ்த்தினர்.

இரு அணிகளுக்குமிடையி லான 5ஆவது போட்டி கிழக்கு லணடனில் நாளை நடைபெறும். (து-7)


## பான் பசிபிக் ஓபன் டென்னிஸ் மரியா ஷரபோவா சம்பியன்

ஜப்பானில் நடைபெற்ற பான் பசிபிக் ஓபன் டென்னிஸ் தொட ரில் மரியா ஷரபோவா சம்பி யன பட்டத்தை வென்றுள்ளார்.

ஜப்பான் தலைநகர் டோக் கியோவில் பல முன்னணி டெனிஸ் நடசத்திரங்கள் பங்கு பற்றிய இப் போட்டித் தொட ரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நண்டபெற்றது.

உலகின் முதல்தர வீராங் கனையான லின்ட்சே டேவன் போர்ட்டை எதிர்த்து விளை யாடிய ஷரபோவா, 1.00மணி 48 நிமிடங்கள் நடைபெற்ற இப்போட்டியில் 6:1, 3:7, 7:6 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று சம்பியன்பட்டத்தை வென்றார்.

இத்தொடரில் நான்கு தட வைகள் கோப்பையை வென்ற டேவன் போர்ட் இம்முறை இரண்டாம் இடத்தையே பெற் றுள்ளார்.



அண்மையில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓபன் தொட ரில் அமெரிக்க வீராங்கனை செரினா வில்லியம்ஸிடம் தோல வியடைந்த டேவன் போர்ட தொடர்ந்து இரண்டாவது முறை யாக இறுதிப் போட்டியில் தோலவியடைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (து-7)

**விளையாட்டு செய்திகள்**



மெக்சிக்கோவில் நடந்த கால்பந்து லீக்போட்டி யில்ஷிவாஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெராகுருஸ் அணியை வீழ்த்தியது. ஷிவாஸ் வீரர் ரபெல் மெடினா விடம் சிக்காமல் பந்தை தட்டிச்செல்ல முயல் கிறார் வெராகுருஸ் அணியின் எர்னஸ் டோலோபஸ்.

## 2003ஆம் ஆண்டு முதல் இற்றைவரை
# 1441 அமெரிக்க இராணுவத்தினர் ஈராக்கில் கொல்லப்பட்டுள்ளனர்

(பக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகளின் வெடிகுண்டுத் தாக்குதலில் மேலும் 2 அமெரிக்க இராணுவ வீரர்கள் உட்பட 10பேர் உயிரிழந்தனர்.

ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு சதாம் ஆதரவு தீவிரவாதிகள் தினமும் வெடிகுண்டுத் தாக்குதல் போன்ற பயங்கரவாதச் செயல்களை அரங்கேற்றி வருகின்றனர். இதன் தொடர்நிகழ்வாக கடந்த 4ஆம் திகதி இரவு பைஜி என்ற இடத்தில் அமெரிக்கப்படையினர் ரோந்து சென்றபோது சாலையில் சக்திவாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் இரண்டு வீரர்கள் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தில், காயமடைந்த 5பேர் அமெரிக்க இராணுவ மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களையும் சேர்த்து ஈராக்கில் 2003ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவம் புகுந்தபிறகு இதுவரை உயரிழந்த அந்நாட்டு வீரர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 441ஆக உயர்ந்துள்ளது.

இதுபோன்று ஈராக்கின் துறைமுக நகரான பஸ்ராவில் கடந்த சனிக்கிழமை காலை ஈராக் பாதுகாப்புப்படையினர் ரோந்து சென்றபோது தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட மோட்டர்சைக்கிள் வெடிகுண்டுத்தாக்குதலில் பாதுகாப்புப்படையினர் 4பேர் உயிரிழந்தனர்.

இதுபோன்று சமாராப் பகுதியில் நிகழ்ந்த சாலையோர குண்டுவெடிப்பில் 2 ஈராக்கிய வீரர்களும், அதே பகுதியில் தீவிரவாதிகள் வைத்த கண்ணிவெடியல் சிக்கி 2 குழந்தைகளும் உயிரிழந்தனர்.

இதற்கிடையே ஈராக் பொலிஸைச் சேர்ந்த 11 அதிகாரிகள் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் கமாண்டர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் பொதுத்தேர்தல் நடந்து முடிந்துள்ள நிலையில் அங்கு நிகழ்ந்துள்ள இத்தகைய சம்பவங்களால் மக்கள் மத்தியில் பீதி அதிகரித்துள்ளது. (ந)



அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கன்டோலிசா ரைஸ் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனைச் சந்தித்துப் பேசினார்.

## சர்ச்சையை ஏற்படுத்திய கரடி பொம்மை



காதலர் தினமான எதிர்வரும் 14ஆம் திகதி காதலர்கள் ஒருவருக்கொருவர் கொடுப்பதற்கான பரிசுப் பொருட்கள் கடைகளில் விற்பனைக்கு வந்துள்ளன.

அமெரிக்காவில் 'டெட்டி பியர்' என்ற கரடி பொம்மை வெளிவந்துள்ளது. இந்தக் கரடி பொம்மை காதல் சின்னம் பொருத்தப்பட்ட ஒரு ஜாக்கட்டை அணிந்து போஸ் கொடுப்பது போல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கரடி பொம்மைகள் ஒவ்வொன்றும் 4ஆயிரம் ரூபாய் வரையில் விலை உள்ளது.

வெர்மான்ட் மாகாணத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் குறும்புக்கார கரடி பொம்மைகளை உடனடியாக வாபஸ் வாங்கவேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளபோதிலும் அவற்றை வாபஸ் பெற இப்பொம்மைகளைத் தயாரித்த நிறுவனம் மறுத்துவிட்டது பெரும் சர்ச்சையாக உருவாகி இருக்கிறது. (து)

# போன் ஆவணங்கள் ஆய்வு! கோபி அனானுக்கு சிக்கல்?

(நியூயோர்க்)

உணவுக்கு எண்ணெய்த்திட்ட ஊழல் தொடர்பாக ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனானின் ஈ-மெயில், தொலைபேசி ஆவணங்களை வால்கர் தலைமையிலான விசாரணைக்குழு ஆய்வு செய்து வருகிறது.

குவைத் மீது படையெடுத்ததால் ஈராக் மீது கடந்த 1991இல் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. ஈராக் மக்களின் அத்தியாவசிய தேவைக்காக, உணவுக்கு எண்ணெய்த்திட்டம் அனுமதிக்கப்பட்டது. இதில், ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனானின் மகன் கோஜோ, முறைகேடு செய்தார்; லஞ்சம் பெற்றார் எனப்புகார்கள் எழுந்துள்ளன.



கோஜோவின் முறைகேட்டுக்கு கோபி அனான் உதவி செய்ததாகவும் குற்றம் சாட்டப்படுகிறது. இத்திட்டத்தில் நடந்த முறைகேடு பற்றி அமெரிக்க பெடரல் வங்கி முன்னாள் தலைவர் பால் வால்கர் தலைமையிலான குழு விசாரிக்கிறது.

சுவிட்சர்லாந்தில் உள்ள கம்பெனியொன்றில் கோபி அனானின் மகன் பணி புரிகிறார். தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, இந்நிறுவனத்துக்குக் குறைந்த விலையில் ஈராக் எண்ணெயை விற்க கோபி அனான் உதவி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அவர் அப்படி செய்தாரா என்பதற்கான ஆதாரங்களை வால்கர் குழு திரட்டி வருகிறது. திட்டம் தொடர்பாக கோபி அனான் கையாண்ட ஆவணங்கள், ஈ-மெயில் மற்றும் தொலைபேசி ஆவணங்களைக் குழு விசாரிக்கிறது. (து)

# மன்னர் ஞானேந்திராவின் இரும்புப்பிடியில் நேபாளம்



(காத்மண்டு)

நேபாள தலைநகர் காத்மண்டுவில் நேற்றுமுன்தினம் முதல் பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட்டன. பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கும் கட்சிகள், மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு எச்சரித்துள்ளது.

நேபாளத்தில் பிரதமர் ஷெர் பகதூர் தாபா தலைமையிலான அரசைக் கடந்த முதல் திகதியன்று மன்னர் ஞானேந்திரா கலைத்துவிட்டார். ஆட்சிப்பொறுப்பை அவரே ஏற்றார். நாட்டில் அவசர நிலை அமுல்படுத்தப்பட்டது. பத்திரிகைகளின் செய்திகள் தணிக்கை செய்யப்படுகின்றன.

அரசுக்கு எதிரான போராட்டங்கள் ஒடுக்கப்படுகின்றன. பதட்டமான பகுதிகளில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. தலைநகர் காத்மண்டுவில் மயான அமைதி நிலவுகிறது. இராணுவத்தின் பிடியில் நகரம் உள்ளது. மக்கள் வெளியே வரவே அச்சப்படுகின்றனர். தொலைபேசிகளை இயக்கக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பகலில் 5மணி நேரமும இரவில் 2மணி நேரமும் மட்டுமே தொலைபேசிகள் செயறபடுகின்றன. அதில் உள்ளூர் அழைப்புகளை மட்டுமே பேச முடியும். தொலைதூர, சர்வதேச அழைபபு, மொபைல் போன், இன்ரர்நெட் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. உலக நாடுகளிலிருந்து நேபாளம் துண்டிக்கப்பட்டுள்ளது.

'மக்களின் சகஜ வாழ்க்கை பாதிக்கும் வகையில் பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்புவிடுக்கும் அரசியல் கட்சிகள், மாவோயிஸ்ட் தீவிரவாத அமைப்புகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்; ஆயுதங்களைக் கீழே போடவைத்து அரசியல் நீரோட்டத்தில சேர்க்க மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மீது கடும் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று வானொலி மூலம் நேற்று விடுத்த அறிக்கையில் அரசு எச்சரித்துள்ளது.

சட்டம் ஒழுங்கைப் பலப்படுத்தவும், பொதுமக்கள் நலனுக்காகவும் நாட்டில் அவசர நிலை பிரகடனப்படத்தப்பட்டுள்ளது.

கல்வி நிலையங்கள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள், தொழிற்துறைகள், போக்குவரத்துக்கள் இயங்க அரசு தடை விதிக்கவில்லை' என்று அறிவிப்பில் மேலும் கூறப்பட்டது. (து)

# கம்போடியாவிலும் பறவைக் காய்ச்சல்

கம்போடியாவில் ப்ளுகாய்ச்சலை பரப்பும் வைரஸ்கள், கோழிகளிடம் அதிகம் காணப்படுகின்றன. பறவைகளிடம் காணப்படும் எச்5என்1 என்ற வைரஸ், மனிதர்களுக்குப் பரவி மரணத்தை ஏற்படுத்தும் அபாயம்கொண்டது.

தாய்லாந்து மற்றும் வியட்நாமில் 30க்கும் அதிகமானவர்கள் இந்நோயால் பலியாகியுள்ளனர்.கம்போடிய நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்ணும் இந்த நோயால் இறந்துள்ளார்.

எனவே இந்த நோயைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கும்படி உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. இதையடுத்து, தாய்லாந்து, வியட்நாம் போன்ற நாடுகளில் லட்சக்கணக்கான கோழிகள் கொல்லப்பட்டுள்ளன. தறபோது வாத்துக்களிடமும் இந்த வைரஸ் பரவியுள்ளதால், வியட்நாமில் ஏராளமான வாத்துக்கள் கொல்லப்பட்டு வருகின்றன.

கம்போடியாவில் கடந்த ஆண்டு செப்ரம்பர் மாதம் ஒருசிலருக்குப் பரவிய பறவைக் காய்ச்சல் பின்பு அடங்கிவிட்டது. ஆனால் தற்போது தலைநகர் நாம் பென்னையொட்டி உள்ள கண்டல் மாகாண கோழிப் பண்ணைகளில் எச்5என்1 வைரஸ் பரவியுள்ளது.

எனவே இந்தக் கோழிகளை கொன்றுவிடும்படி கம்போடிய சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது. எனினும், கம்போடியாமக்கள் யாரும் தற்போது இந்த வைரசால் பாதிக்கப்படவில்லை என சுகாதார அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது. (து)

# பாகிஸ்தானியர்கள் இரண்டு பேருக்கு சவுதியில் மரணதண்டனை

(ரியாத்)

ஹெராயின் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இரண்டு பாகிஸ்தானியர்கள் சவுதி அரேபியாவில் நேற்றுமுன்தினம் தலைதுண்டித்துக் கொல்லப்பட்டனர்.

முஸ்லிம் நாடான சவூதி அரேபியாவில் இஸ்லாமியச் சட்டம் கடுமையாக பின்பற்றப்பட்டு வருகிறது. கொலைக குற்றவாளிகள், கற்பழிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள், போதைப் பொருள் கடத்தல்காரர்கள் ஆகியோருக்கு இங்கு மரணதண்டனை விதிக்கப்படும். பொது இடத்தில் மக்கள் முன்னிலையில் தலை துண்டிக்கப்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப்படும்.

புனித நகரான மெக்காவில் ஹெராயின் கடத்தியதாக பாகிஸ்தானியர்கள் இரண்டுபேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் பொதுமக்கள் முன்னிலையில் இந்த இரண்டுபேரின் தலைகள் துண்டிக்கப்பட்டதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவில் கடந்த 2003ஆம் ஆண்டு 53பேருக்கும், 2004ஆம் ஆண்டு 35பேருக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த ஆண்டு இதுவரை 11பேரின் தலை துண்டிக்கப்பட்டுள்ளது. (து)

# புனர்வாழ்வுக் கழகத்திடம் கணக்கு கேட்க ஜே.வி.பிக்கு அருகதையில்லை

## ஜே.வி.பி. தமிழ் எம்.பிக்கு ரவிராஜ் பதில்

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் சுனாமிஅனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் புனர்வாழ்வுக்கான பணிகளை மேற்கொண்டு வரும்



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கணக்கு கேட்பதற்கு ஜே.வி.பியினருக்கு எந்த அருகதையும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து ஒலிபரப்பாகும் பிரபல ஊடகமொன்றின் நிகழ்ச்சியின் விவாதமொன்றில கலந்துகொண்ட ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் ஐமலிங்கம் சந்திரசேகரனின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கடுமையாகத் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த விவாதத்தில் சுனாமிக்குப் பின்னரான புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட்டது. இதில் கருத்து வெளியிட்ட ரவிராஜ், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கணக்கு கேட்பதற்கு இனவாதக்கட்சியான ஜே.வி.பியினருக்கு எந்த அருகதையும் இல்லை. ஏனெனில் அவர்கள் வேறுபல கணக்குகளை மக்களுக்கு காட்டவேண்டியிருக்கிறது. இறுதியாக சவால்களை உங்களுக்கு முன்வைக்க விரும்புகின்றேன். தமிழர் புனர் வாழ்வுக்கழகம் நேற்று இன்றல்ல கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களின் மத்தியில் பணி புரிந்து வந்திருக்கின்றது.

யாழ்ப்பாணத்திற்கு சிங்கள அரசுகள், சிங்கள பேரினவாதிகள் பனடோல் வில்லைகளைக் கூட அனுப்பாத நிலையிலேயே, தமிழ் மக்கள் வாடி வதங்கிய அந்த நேரத்திலேயே அவர்களைப் பாதுகாத்தவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்தான் என்றார்.

இச்சந்தர்ப்பத்தில் குறுக்கிட்டு அன்று பொருளாதாரத் தடை விதித்தவர்கள் அன்றைய ஐ.தே.க. அரசாங்கம் என ஜேவிபியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் கூறியபோது, ரவிராஜ் அதற்கும் கடுமையாகப் பதிலளித்தார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சியும் சரி சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் சரி, ஜே.வி.பியும் சரி எல்லாம் ஒன்றுதான். நீங்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். நாம் யாருககும் அடிபணிந்தவர்கள் அல்ல என்பதனையும் உங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறோம். நாம் யாரிடமும் கையேந்திப் பிழைப்பவர்கள் அல்ல. நீங்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய இனவாத மட்டைகள். உங்களுக்கு நாம் சரியான பாடத்தைப் படிப்பிப்போம் என ரவிராஜ் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,


இன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைப் பற்றி பேசுகிறீர்கள். உங்களுக்கு ஒன்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம், கணக்கு கேட்கிறீர்கள். இந்நாட்டு மக்கள் உங்களிடம் சில கணக்குகள் கேட்க விரும்புகிறார்கள்.

முதன் முதலாக இந்நாட்டில் ஆயுதத்தை ஏந்திப் போராடியவர்கள் நீங்கள். 71ம் ஆண்டு சொந்த மக்களையும், அரச படைகளையும் கொன்று குவித்தவர்கள் நீங்கள். 88, 89, 90ம் ஆண்டு காலப்பகுதியில் துண்டுப் பேப்பரை அனுப்பி இந்திய பருப்பு சாப்பிடடவர்களை கொன்று குவித்தவர்கள் நீங்கள்.

உங்களை கேட்க விரும்புவது இதுதான். இன்று நீங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பார்த்து ஏந்திய ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள். இன்று வரையில நீங்கள் வைத்திருந்த ஆயுதங்களை உத்தியோகபூர்வமாக ஒப்படைத்திருக்கின்றீர்களா? உங்களிடம் இருந்த ஆயுதங்களின் தரங்கள், உங்களிடமிருந்து ஆயுதங்களின் பட்டியல்களை இன்றுவரை வெளியிட்டிருக்கின்றீர்களா? உங்களால் கொள்ளையிடப்பட்ட வங்கிகள் எவ்வளவு? அங்கே எவ்வளவு தொகைப் பணம் கொள்ளையிடப்பட்டது? எவ்வளவு கிலோ தங்கம் கொள்ளையிடப்பட்டது? அப்பாவி மக்கள் அடகு வைத்த நகைகள் கொள்ளையடித்த விபரத்தை வெளியிட்டிருக்கின்றீர்களா?

உங்களால் கொல்லப்பட்ட அரசியல்வாதிகளுடைய பெயர்களை நீங்கள் வெளியிட்டிருக்கின்றீர்களா? ஏன் நீங்கள் இன்று சந்திரிகா அம்மையாரின சீலையில் தொங்கிக் கொண்டிருக்கின்றீர்கள. அவரின் கணவரைக் கொன்றவர்கள் கூட நீங்கள் தான். அதனை நீங்கள் மறக்கலாம் நாங்கள் மறக்கமாட்டோம். உங்களால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் பட்டியலை முதலில் வெளியிடுங்கள்.

கொழும்பு மாவட்ட பிரதி மேயர் அசாத் அலி கூறியது போன்று, ஒவ்வொருவரின் வீடு வீடாகச் சென்று நீங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுங்



கள். உங்களுடைய கட்சி இன்று வரை இத்தகைய தகவல்களை வெளியிடவில்லை.

எனவே நீங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கணக்குக் கேட்காதீர்கள். அதற்கு உங்களுக்குத் தகுதியுமில்லை அருகதையும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (க-4)

### ரணிலின் லண்டன் நகர்வு அவதானிப்பு

எதிர்கட்சித் தலைவர் ரணில விக்கிரமசிங்க லண்டனில் நடாததிய சந்திப்புக்களையும் ஒவ்வொரு நகர்வுகளையும் சந்திரிகாவின் ஆலோசகர் ஜெயந்த தனபால அவதானித்துவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவிற்கான இலங்கையின் தூதுவர் பாகிஸ் முஸ்தபா ஊடாக ரணிலின் நகர்வுகள உன்னிப்பாக அவதானிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவிற்கு ரணில் குழுவினர் சென்றிருந்த போது பாகிஸ் முஸ்தபாவின் கைத் தொலைபேசிக்கு வெளிநாட்டமைச்சின் கொழும்பு அதிகாரிகளும் ஜெயந்த தனபாலவும் தொடர்பு கொண்டு தகவல்களைத் திரட்டி வந்ததாகக் கூறப்படுகிறது. (ச-4)

### அத்திபார கிடங்கில் இருந்து நீர் கசிவு

அலவாய் முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு கட்டடம் அமைப்பதற்கு அத்திபாரக் கிடங்கு வெடியபோது மேல்பகுதியில் இருந்து நீர கசிந்துள்ளது. இப் பகுதியில் கிணறுகள் வெட்டப்படும் போது 35முதல் 40அடிக்கு கீழ்த் தான் தண்ணீர் வருவது வழமை.

இதனால் இதனை பெருமளவிலான மக்கள் ஆவர்த்துடன் பார்வையிட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுகின்றது. (க-8)

## இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு அமெரிக்கா பயிற்சி; இந்தியா கவலை

(கொழும்பு)

இலங்கை இராணுவததின் உயர் அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குவதற்கு அமெரிக்கா எடுத்துவரும் முயற்சிகள் குறித்து இந்தியா தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.

ஹவாய்த்தீவில் இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்க அமெரிக்கா முடிவுசெய்துள்ளது. இந்தப் பயிற்சிக்கென இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் ஹேந்த விதாரணவைத் தெரிவு செய்வதற்கு அமெரிக்கத் தரப்பால் மேற்கொள்ளப்பட்ட கடும் முயற்சிகள் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக இந்தியத்தரப்புத் தெரிவிக்கின்றது.

அமெரிக்கப் பயிற்சிக்காக அதிகாரிகளைத் தெரிவு செயவதற்கு தெரிந்தெடுக்கப்பட்ட குழு பிரிகேடியர் குலதுங்கவை சிபார்சு செய்திருந்தது. இருந்த போதிலும் பிரிகேடியர் ஹேந்த விதாரணவை அனுப்பி வைக்குமாறு இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரக பாதுகாபபு அதிகாரி கேணல் றிச்சாட் ஏ.குய்லின் பாதுகாப்பு அமைச்சகத்திடம் வலியுறுத்தியதாகவும் தெரியவந்துள்ளது.

அமெரிக்க நெருக்கடியினையடுத்து பிரிகேடியர் ஹேந்த விதாரணவே இப் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்நத மற்றுமொரு லெப்ரினன் கேணல் தர அதிகாரியும் இப் பயிற்சிககுத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, உள்ளகப் புலனாய்வு அதிகாரியான கீர்த்தி ஹயநாயகா இந்தப்பயிற்சிக்கென அமெரிக்கா செல்லவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

புலனாய்வு அதிகாரிகளைத் தெரிவுசெய்து அழைக்கும் அமெரிக்க நடவடிககை தமக்குக் கவலையளிப்பதாக இந்தியா தெரிவிததுள்ளதாக பிரபல ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது. (ச-04)

### போஷாக்கு உணவு வழங்கத் திட்டம்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித்தாய்மார், ஐந்துவயது குழந்தைகள் ஆகியோருக்கு போஷாக்கு உணவுகளை வழங்கும் விசேட திட்டமொன்றை சுகாதார அமைச்சு ஆரம்பிக்கவுள்ளது.

உலக உணவுத்திட்ட அமைப்பு இதற்கு உதவி வழங்கும்.

மேல மாகாணத்தில் இந்தத் திட்டம் மிக விரைவில் அமுல்படுத்தப்படும் என்றும், அதனைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்படும் என்றும் அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-9)

## புலிகளின் பகுதியில் முஸ்லிம்களுக்கு வர்த்தகம் செய்வதற்கு அனுமதி

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமீழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் முஸ்லிம் வியாபாரிகள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான முஸ்லிம் வியாபாரிகள் கடந்த சில தினங்களாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சுதந்திரமான முறையில வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தர்களுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையில் கொக்கட்டிச்சோலையில் இடம் பெற்ற சந்திப்பின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாகவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பள்ளிவாயல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் செயலாளர் சி.அசனார் தெரிவித்தார்.

மடடக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பதுளை வீதியில் உள்ள கொடுவாமடு சோதனைச சாவடிக்கு அப்பால் முஸ்லிம் வியாபாரிகள் செல்வதற்கு இதுவரை காலமும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் மேலும் புரிந்துணர்வுகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் மாவட்டத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் முஸ்லிம் மக்கள் வியாபார நடவடிக்கைகளிலும் விவசாயச் செய்கைகளிலும் ஈடுபடலாம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (க)

## ஹெல உறுமய உறுப்பினரை சந்திப்பதற்கு புலிகள் மறுப்பு

(கொழும்பு)

தற்போதைய நிலவரம் தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளா தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடாத்துவதற்கு ஹெல உறுமயவின் முன்னாள உறுப்பினர் விடுத்த வேண்டுகோளை புலிகள் தரப்பு நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரை சந்திப்பதற்கு தமிழ்ச்செல்வன் மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

இதற்கு தமிழ்ச்செல்வன் மேற்படி உறுப்பினருக்கு கூறியதன்படி, அவர் கட்சியில் இருநத போதே தமிழர் பிரச்சினைகளை தீர்க்க உதவவில்லை.

அவர் கட்சியைவிட்டு வெளியேறியபின் தற்போது பேசி எதுவித பயனும் இல்லை என கூறியதாக அறியப்படுகிறது.

மேற்படி வேண்டுகோள் ஒரு தமிழ் அரசியற்கட்சி உறுப்பினா மூலமாகவே ஹெலஉறுமய உறுப்பினர் விடுத்திருந்தார். (க-6)

## தன்னிச்சையாக ஒப்பந்தம் செய்ய திறைசேரியினால் தடைவிதிப்பு!

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு, புனரமைப்பு ஆகியவறறிற்கான பணிகள் தொடர்பாக, வெளிநாட்டு நிதி வழங்கல் முகவர் நிறுவனங்களுடன் தன்னிச்சையாக உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு திறைசேரி தடை விதித்துள்ளது.

வெளிநாட்டு நிதி வழங்கல் முகவர் நிறுவனங்களுடன், இவை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்களையோ, உடன்படிக்கையையோ நேரடியாக செய்து கொள்வதற்கு அமைச்சுக்கள், மாகாண சபைகள், அரசு முகவர் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு திறைசேரி தடை விதித்துள்ளது.

தன்னிச்சையாக இன்றி, நிதியமைச்சுடன் முறையான ஆலோசனைகளை மேற்கொண்ட பின்னர், இத்தகைய புரிந்துணர்வு ஒப்பந்தம், உடன்படிக்கை ஆகியவற்றை மேற்கொள்ள முடியும் என்றும் திறைசேரி அறிவித்துள்ளது.

நிவாரண நடவடிக்கைகள் தொடர்பான பணிகளில் சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காகவும் வருமானத்துறை சட்டங்களுடனான முழுமையான ஒத்துழைப்பை உத்தரவாதப்படுத்துவதற்காகவும் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, திறைசேரி செயலாளர் பி.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தங்கள் இடம்பெற்று, இரு தினங்களுக்குப் பின்னர், தீர்வையற்ற முறையில் பல பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாரம் முதல் திறைசேரி மீண்டும் சில பொருட்கள் இறக்குமதிக்கு சுங்கத் தீர்வை விதித்துள்ளது.

மருத்துவப் பொருள்கள், பால்மா, குழந்தை பால், குழந்தை உணவு, கூரைக்கான பொருள்கள ஆகியவை தீர்வையற்ற இறக்குமதிப் பொருட்களில் அடங்குகின்றன. (க)

கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல். - குறள்

# வலம்புரி

## இலங்கையின் ஜனாதிபதி குற்றவாளிக்கு இடம்கொடுத்தார்

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நட்டாற்றில் கைவிடும் நிலையில் ஜே.வி.பியுள்ளது. எந்த நேரத்திலும் ஆட்சியிலிருந்து விலகப்போவதாகப் பயமுறுத்திவந்த ஜே.வி.பி அதனை நிஜப்படுத்துவதில் உறுதிபு'ண்டுள்ளது.**

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் முக்கிய அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட ஜே.வி.பி இப்போது ஜனாதிபதியுடன் முரண்பட்டுக்கொண்டு அரசுக்கான ஆதரவினை விலக்கப்போவதாக எச்சரிக்கை செய்து வருகின்றது.**

**ஜே.வி.பியின் இந்த எச்சரிக்கைக்கான காரணங்கள் என்ன? என்று ஆராய்ந்தால் அது சமாதான முயற்சி தொடர்பான பிரச்சினை என்பதாகவே இருக்கும். அதாவது விடுதலைப் புலிகளை ஓரங்கட்டவேண்டும் என்பது ஜே.வி.பியின் நிலைப்பாடு. ஆனால் இதனைச் செய்வது சரிவராத காரியம் என்பது ஜனாதிபதிக்குத் தெரிந்த விடயம். இங்குதான் ஜனாதிபதிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டுள்ளது.**

**விடுதலைப் புலிகளை ஓரங்கட்டுவதென்பது ஜனாதிபதியாலோ அன்றி ஜே.வி.பியாலோ அன்றி ஒட்டுமொத்த சிங்கள மக்களாலோ முடியாத காரியம்.**

**ஏனெனில் விடுதலைப் புலிகள் ஜே.வி.பியைப் போன்று அரசின் வாலைப்பிடித்துக்கொண்டு பாராளுமன்ற ஆசனங்களை அலங்கரிப்பவர்கள் அல்ல.**

**அவர்கள் குருதி சிந்தி களமாடி தமது தியாகத்தை - யுத்த திறத்தை உலகில் நிருபணமாக்கியவர்கள். அவர்களின் தாக்குதல் வேகத்திற்கு இரண்டு நாட்டுப் படைகள் புறமுதுகு காட்டவேண்டிய தேவையிருந்தது.**

**அத்துடன் உலக வல்லரசுகள் அவற்றின் ஏவல் நாடுகள் என்பவற்றிலிருந்து வந்து கூலிக்கு விமானம் ஓட்டி குண்டுபோட்டவர்கள் தமது உடலை தமிழர் தாயகத்திலேயே புதைத்துக் கொண்ட வரலாறு மேலதிகம். இந்த உண்மைகளை தென்னிலங்கையிலிருந்து ஹோட்டல்களில் உண்டு உறங்கும் ஜே.வி.பியினர் மறந்துபோவதற்கு நியாயமிருக்கவே செய்யும்.**

**ஆனால், ஒருநாட்டின் பொறுப்புவாய்ந்த பதவியை அலங்கரித்துக்கொண்டிருக்கும் ஜனாதிபதி அதனை மறப்பது முடியாத காரியமே. அதிலும் தென்னிலங்கையில் கொலனாவ முதல் கட்டுநாயக்க வரையிலான தாக்குதல்கள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றுமே மறக்கமுடியாதவை.**

**இவ்விதம் போராட்டம் நடத்தி தமது பலத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளை ஓர் சாதாரண அமைப்பாக ஜே.வி.பி கருதுமாக இருந்தால் அதுவே இந்த நூற்றாண்டின் முதலாவது முட்டாள்தனமாக இருக்கும்.**

**எதுவாயினும் இப்போது அரசிற்கு எச்சரிக்கை விடும் ஜே.வி.பி. அரசில் இருந்து விலகுமா அல்லது ஜே.வி.பியின் அற்ப ஆசைகளுக்கு ஜனாதிபதி தலையசைப்பாரா என்ற வினாக்களுக்கான விடைகள் காலத்தின் அசைவிலேயே பெறப்படுமாக இருந்தாலும் அரசின் ஆதரவை விலக்குவதாக இருந்தால் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இலங்கையில் இருக்கமுடியாது என்பதை அவரே உறுதிசெய்துகொண்டு வெளிநாட்டுக்கு ஓட்டம் பிடித்துள்ளார்.**

**அப்படியானால் ஜே.வி.பி. அரசுக்கு வழங்கி வந்த ஆதரவிற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஓர் குற்றவாளி தப்பித்து இந்த மண்ணில் சுதந்திரமாக நடமாட அனுமதித்துள்ளார் என்பது உறுதியாகின்றது அல்லவா.**

# போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான புதிய தொழில் பயிற்சித்தளம் திறந்துவைப்பு

(கிளிநொச்சி)

போர் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கல்வி, தொழிற்கல்வி, அபிவிருத்தி நிறுவனத்தில் பாடநெறிப் பிரிவுத்தளமொன்று கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாரதிபுரத்தில் சம்பிரதாயபூர்வமான முறையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தொழில் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழா புனர்வாழ்வுக் கழகத்தால் நேற்றுமுன்தினம் காலை 11.00 மணியளவில் இப்பயிற்சித்தளம் திறந்துவைக் கப்பட்டது. தமிழீழத் தேசியக் கொடியேற்றத்துடன் இந் நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

தொழிற் பயிற்சிக் கல்லூரியின் கீதத்தினைத் தொடர்ந்து தொழிற் பயிற்சிப் பாடநெறிக்கான பெயர்ப்பலகையினை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாகப் பணிப்பாளர் வின்சன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து தொழிற் பயிற்சிப் பாடநெறிக்கான புதிய பிரதான கட்டடத் தொகுதியினை தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பாவும், சர்வதேச தொழில் நிறுவனத்தின் வடபகுதிக்கான இணைப்பாளர் ஜோசப்பும் திறந்து வைத்தனர்.

இதனைத் தொடாந்து போரினால் பாதிக்கப்பட்ட சிறுவா களுக்கான கல்வி, தொழிற கல்வி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் அந்நிறுவனப் பணிப்பாளர் யோகன் தலைமையில் ஒன்றுகூடல் ஆரம்பமாகியது.

அவரது தலைமை உரையினைத் தொடர்ந்து நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கி.பாப்பாவும், ரடோ நிறுவனப் பணிப்பாளா லோறன்ஸ் கிரிஸாயும் சர்வதேச தொழில் நிறுவன, தொழிற பயிற்சிப் பாடநெறி ஆலோசகர் சிவாவும் கருத்துரைகளை வழங்கினர்.

இறுதியாக ரீடோ நிறுவன தலைமை இணைப்பாளர் சீலனின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் இனிது நிறைவு பெற்றதைத் தொடர்ந்து உத்தியோகபூர்வமாக தொழிற் பயிற்சிப் பாடநெறிகள் ஆரம்பமாகின.

பாடநெறிகளாக மேசன் வேலைத் தொழிற் பயிற்சி, தச்சு வேலைத் தொழிற் பயிற்சி, நீாக்குழாய் பொருத்தும் தொழிற் பயிற்சி, மின் இணைப்பு தொழிற் பயிற்சிப் பாடநெறிகளுடன் கூடிய செய்முறைப் பயிற்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (க)

# இரகசிய ஒப்பந்தம்

(கொழும்பு)

இந்தியாவின் பாரத் பெற்றோலிய நிறுவனத்துடன அரசாங்கம் இரகசிய ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

சுனாமியினால் நாடு பாரிய அழிவுக்குள்ளான நிலையில் அரசாங்கம் பாரத் பெற்றோலிய நிறுவனத்துக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூன்றில் ஒரு பங்கை விற்பனை செய்துள்ளதாகவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

தாம் தனியார் மயப்படுத்தலுக்கு எதிராகச் செயற்படவில்லை என்று குறிப்பிட்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் பங்காளியாக இருக்கும் ஜே.வி.பி. இந்த விடயத்தில் தமது நிலைப்பாட்டினை வெளியிடாமல் இருந்து வருவது குறித்து தான் தமக்கு பெரும் ஆச்சரியம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. (க-4)

# பாதிப்புற்றவர்களுக்கு விரைவில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும்

## அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் மற்றும் பொது இடங்களில் தங்கியுள்ளவர்களுக்கு விரைவில் நிரந்தரமாக வீடுகள் அமைத்துக்கொடுப்பதை அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கை என தேசியப் பாதுகாப்புப் பிரதியமைச்சர் ரத்ன சிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த அனத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்கள் தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதற்கான நிவாரணங்களையும் அடிப்படைவ்சதிகளையும் வழங்குவதில் அரசாங்கமும் பல்வேறு நிறுவனங்களுமே முதலில் செயற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பொது இடங்களில் தங்கியுள்ள மக்களை நிரந்தர இருப்பிடங்களில் தங்கவைப்பதற்கான வேலைத் திட்டம் ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் மாவட்ட மட்டததில் இன்று முதல் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இடம்பெயா்ந்துள்ளவா்களுக்கு நிரந்தர இருப்பிடங்களை அமைத்துக் கொடுப்பதற்கான திட்டமிட்ட யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை பன்முகப்படுத்தல் குழுவுக்கு வழங்கமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-4)

# 58 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவில் நிகழ்ந்த ஆழிப்பேரலையின் அனர்த்தம் காரணமாக பாரிய உயிரிழப்புக்களுக்கு மத்தியில் தங்களது வாழ்வாதாரங்களை முற்றாக இழந்து, தண்ணீரூற்று றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் உள்ள நலன்புரி நிலையத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த 58 குடும்பங்களுக்கு தற்காலிகமான வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு அண்ணமார் கோவிலடி எனும் இடத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒருங்கிணைப்பில் சேவாலங்கா நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட 58 வீடுகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் பொறுப்பேற்கப்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கடந்த சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முல்லைத்தீவு மாவட்ட ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண, புனரமைப்பு வேலைத்திட்ட பணிப்பாளாகளில் ஒருவரான மூர்த்தி, முல்லைததீவு மாவட்ட அரசசாாபற்ற நிறுவனங்களின் இணையத தலைவரான சிவனடியார், கிராம சேவையாளர் செல்வி.சுமதி மற்றும் பெருமளவிலான பொது மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

குடியமர்த்தப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடிப்படைத் தேவைகளை உள்ளடக்கிய பாவனைப் பொருட்கள், சமையல் உபகரணங்கள் என்பன உட்பட உலா உணவுப் பொருட்கள் போன்றவற்றுடன் ஆயிரம் ரூபா பணமும் மூர்த்தியால் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ஐ.தே.கவில் இருந்து மு.காங்கிரஸ் விலகும்?

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விலகப்போவதாக அறிவித்துள்ளது.

கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முறுகல் தம்மைப் பாதிப்பதாகக் கூறியே இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்ட முறுகல் காரணமாக மாநகரசபைக்குள் தமது கட்சி ஓரங்கட்டப்படுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சௌபிக் ரஜாப்தீன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநரகசபையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முதல்வர் பிரசன்ன குணவர்த்தனவுக்கும் உதவி முதலவர் அஸாத்சாலிக்கும் இடையிலேயே முறுகல் நிலை ஏற்பட்டுளளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-4)

# பதிவு செய்யவும்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் சுனாமி பேரலை அனர்த்தங்களால் பலியாகிய 1026 பேர்களின் பதிவுகள் மருதங்கேணி இறப்பு, பிறப்பு பதிவாளர்களால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை சுனாமி அனர்த்தங்களால் பலியாகி பதிவு செய்யப்படாதவர்கள் உடனடியாக இறப்பு, பிறப்பு பதிவாளரிடம் தொடர்பு கொண்டு பதியுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (ப-35)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**செயல்முறை மதம் பற்றிய சாதாரணக்கருத்து எங்கே கொண்டு போய் விடுகிறது என்பதைக் கவனியுங்கள் . பிறருக்கு நல்லது செய்வது பெரிய காரியம் தான். ஆனால் அதுதான் எல்லாம் என்று சொல்லும் போது அது வெறும் உலோகாயதமாக மாறுவதான ஆபத்து இருக்கிறது. அது மதம் அல்ல நாத்திகத்தை விடச் சிறந்ததும் அல்ல. மாறாக அதை விடச் சற்றுக் குறைவானதே.**

சுவாமி விவேகானந்தர்

# பொது கட்டமைப்புக்கான அரசின் பதிலுக்காக நோர்வே காத்திருப்பு

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் வாழ்க்கையினை வழமைக்குக் கொண்டுவருவதற்கு ஆறுமாத காலத்திற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்ற குறிக்கோளை தாம் கொண்டிருப்பதாக எதிர்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு தமது உதவி தேவை இல்லை என்ற பட்சத்திலேயே தாம் தனியாக அந்த இலக்கினை நோக்கிச் செயற்படுவதாக குறிப்பிட்டார்.

நாட்டு மக்களுக்கு உதவுவதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கம் என்பதால் அது தொடர்பாக விவாதங்கள் அவசியமில்லை என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்தவாரம் தாம் மேற்கொண்ட ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம் பற்றியும் அங்கு விளக்கினார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவது, இலங்கையின் சமாதான நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு ஏற்றதாக அமையுமென உலகநாடுகள் கருதுகின்றன.

வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான பொது அலகொன்றை ஏற்படுத்துவது தொடர்பான அரசாங்கத்தின் பதிலை நோர்வேப் பிரதிநிதிகள் அடுத்தவாரத்திற்குள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

முழுநாட்டிற்கும் நிவாரணங்களை மேற்கொள்வதற்கான பொது அலகொன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் தீர்மானம் ஒன்றுக்கு வரவேண்டும் என்பதனைத் தான் சுட்டிக் காட்டியதாக அவர் மேலும் தெரிவித்தார். (04)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் மைதானத்தில் அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகிழக்குப் பிரதேசசபைச் செயலாளர் இ.இராசதுரையும், இவரது பாரியாரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்புவிருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரமும், கௌரவ விருந்தினராக வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் க.சங்கரும் கலந்துகொள்ளவுள்ளனர். (க)

# சமாதான நீதிவான்கள் இன்று கௌரவிப்பு

## பிரதமர் உட்படப் பல அமைச்சர்களும் கலந்துகொள்வர்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு உட்பட நாட்டின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த சமாதான நீதிவான்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெறவிருக்கின்றது.

இவர்களோடு அரச திணைக்களங்களின் நாற்பது பிரதிநிதிகளும் கௌரவிக்கப்படவிருப்பதாக இலங்கையின் சமாதான நீதிவான்கள் சங்கத்தின் தலைவர் ஏ.எம். அசீம் தெரிவித்துள்ளார்.

தேசகீர்த்தி, தேவகீர்த்திகிறி ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டு இவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதமந்திரி மகிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். அமைச்சர்களான டபிள்யூ.டி.கே.செனிவிரத்ன, கலாநிதி சரத் அமுனுகம, பேரியல் அஷ்ரப், அனுராபண்டாரநாயக்க, பௌசி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்படப் பல பிரமுகர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-09)

# 'சுனாமி 81' குழந்தை நாளை கொழும்புக்கு



(கல்முனை)

சுனாமிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் கல்முனையில் கண்டெடுக்கப்பட்ட 3 மாத ஆண் குழந்தைக்கு உரிமைகோரும் பெற்றோர்களின் விவகாரம் பெரும் சர்ச்சைக்குள்ளாகியும், உலகின் கவனத்தை ஈர்த்தும் வரும்நிலையில் மேற்படி குழந்தை மரபணுப் பரிசோதனைக்காக நாளை கொழும்புக்கு கொண்டுசெல்லப்படவிருக்கின்றது.

கடலனர்த்தத்தின் பின்னர் கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட 81 ஆவது குழந்தையாக இருப்பதால் இக்குழந்தைக்கு 'சுனாமி 81' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

தமது குழந்தைக்கு அபிலாஷ் எனத் தாம் பெயரிட்டதாகப் பெற்றோர் கூறுகின்றனர்.

இக்குழந்தையின் உண்மையான பெற்றோர் என நம்பப்படும் ஜெயராசா ஜூனித்தா தம்பதியினரே இரண்டு தடவைகள் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின்போதும் நீதிமன்றத்திற்குச் சமுகமளித்திருந்தனர்.

குழந்தைக்கு உரிமைகோரும் ஏனைய எட்டுப் பெற்றோரும் நீதிமன்றில் ஆஜராகவில்லை.

நிலைமை இவ்வாறாக இருந்தபோதும் எதிர்காலத்தில் எவரும் குழந்தைக்கு உரிமைகோராத வகையில் மரபணுப் பரிசோதனையை நடத்திப் பெற்றோரை உறுதிப்படுத்துவதற்கு நீதிமன்றம் தீர்மானித்திருக்கின்றது.

இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. (த)

## உயர்தரப்...

பிரச்சினைகளை ஒருபோதும் தீர்த்து வைக்கமாட்டாது.

தேசிய பிராந்திய சம்ப்வங்களினால் உயர்தரப் பரீட்சைகள் காலத்திற்குக் காலம் ஒத்திவைக்கப்பட்டு பின் ஒரே நாளில் நடந்ததிற்கு முன்னுதாரணங்கள் பல உண்டு.

2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை முன்னிட்டு ஏப்ரல் மாதம் நடத்தவேண்டிய பரீட்சை மே மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது. முன்னதாக 1996 ஆம் ஆண்டு பரீட்சை மின்சார வெட்டு காரணமாக ஒரு மாதம் ஒத்திவைக்கப்பட்டது.

எனவே சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாதிக்கப்படாத மாணவர்களின் நலன்களை கருத்திற்கொண்டு இப் பரீட்சையை 2005 ஆகஸ்ட் மாதம் வரை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்வதாக அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## கௌசல்யன் சுட்டுக்கொலை...

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

விடுதலைப் புலிகளின் தலைமையின் அழைப்பின்பேரில் கிளிநொச்சிக்கு வந்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்திவிட்டு கௌசல்யன் குழுவினர் மட்டக்களப்புக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். மட்டக்களப்புக்குத் திரும்பும் வழியில் வவுனியாவில் முன்னாள் எம்.பி அரியநாயகம் சந்திரநேரு, அவருக்குப் பாதுகாப்பு வழங்கிவந்த பொலிஸார் இருவர் உட்பட மொத்தம் 9 பேருடன் வாகனம் ஒன்றில் மட்டக்களப்புக்குச் சென்றுகொண்டிருந்தனர்.

மட்டக்களப்புக்குச் சென்றுகொண்டிருந்த வழியில் பொலநறுவை வெலிகந்தை நாமல்கம பிள்ளையார் கோவிலில் இறங்கி கடவுளை வணங்கிவிட்டு புறப்பட தயாரான நேரத்தில் இவர்கள் சென்ற வாகனத்தின் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

வீதி ஓரமாக மறைந்திருந்த இனந்தெரியாத குழுவொன்றினால் இரவு 7.45 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் மற்றும் 3 போராளிகள் சாரதி ஒருவர் உட்பட 5 பேர் பலியாகினர். முன்னாள் எம்.பி.சந்திரநேரு, பொலிஸ் கான்ஸ்டபிள் இருவர், போராளி ஒருவர், பொதுமகன் ஒருவரென 5 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு பொலநறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் உடல்கள் வெலிகந்தை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வெலிகந்தை வைத்தியசாலையில் ஐந்து சடலங்கள் வைக்கப்பட்டுள்ளதாகவும், அதில் கௌசல்யனின் உடலும் அடங்குவதாக வெலிகந்தப் பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

இதேவேளை துப்பாக்கிச்சூட்டில் இறந்தவர்கள் மட்டக்களப்பு - அம்பாறை அரசியற் பொறுப்பாளர் இ.கௌசல்யன், மதிமாறன், குமணன், மற்றும் வாகனசாரதி ஆகிய நால்வருமாவர் என விடுதலைப் புலிகளை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு உட்பட ஏனைய மூன்று பொலிசாரும் காயமடைந்துள்ளார்கள். இவர்களுடன் விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் எஸ்.தமிழேந்தியும் பயணித்தார் என வதந்தி பரப்பப்பட்டதாகவும் எனினும் விடுதலைப்புலிகள் அதனை மறுத்துள்ளதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியற் பொறுப்பாளர் இ.கௌசல்யனுடன், விநோதன், புகலன், செந்தமிழ், நிதிமாறன் ஆகிய நான்கு விடுதலைப்புலி உறுப்பினர்களே வாகனத்தில் பயணித்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தாக்குதல் சம்பவத்தையடுத்து மட்டக்களப்பில் பதற்றமான சூழ்நிலை நிலவுவதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## சர்வதேச...

நிறுவனங்கள் ஊடாக வழங்கமுடியும் என்றார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு வேலை வாய்ப்புதேடிச் சென்றால் அவர்கள் திருப்பியனுப்பப்படமாட்டார்கள். ஆனால் தற்பொழுது அங்கு வேலை வாய்ப்புக்களில்லை என அவர் கூறினார்.

இதேவேளை ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபன் இவான்ஸ் தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்குச் சென்று சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிடவுள்ளனர். (ச-04)

## உயர்தரப் பரீட்சையை யூன்...

மகிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதம் நடாத்தவிருந்த இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த 2 இலட்சத்து 44 ஆயிரத்து 883 பரீட்சார்த்திகளில் யூன் மாத விசேட பரீட்சைக்கு தோற்றவென 3 ஆயிரத்து 683 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் இருமுறை பரீட்சை நடத்துவதால் பல்கலைக்கழக தெரிவில் ஏற்படும் இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு இந்த முடிபு எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (04)

நாதன்ஸ்
யாழ்ப்பாணம் (குளிரூட்டியது)
05.02.2005 முதல்
சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந் - நக்மா
ரகுவரன் இன்னும் பலர் நடித்த
பாட்ஷா



தினசரி 4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிரஞ்சனாஸ்
(சங்கானை)
பிரசாந், சிநேகா, வடிவேல், ஜனகராஜ்
மற்றும் பலர் நடித்த
ஆயுதம்



கா.நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

மலையாள மாந்திரீகம்
திரு. V. குமரனின் மலையாள மாந்திரீகத்தில் அநேக நன்மைகள், தீராத நோய்கள், திருமணத் தடைகள், தொழில் பிரச்சினைகள், வியாபார ஸ்தானத்தில் பிரச்சினைகள் போன்றவற்றிற்கு உங்கள் பெயர், நட்சத்திரம் ஆகியவற்றை சொன்னால் உங்கள் வீடுகளிற்கு அனுப்பிவைக்கப்படும்.
தீய காரியங்களுக்கு இடமில்லை.
(9253) தொடர்பு:- 0776-536622

உடன் தேவை
ஓவ்செற் இயக்குநர்கள்
ஓவ்செற் - பயிலுநர்கள்
(யாழ் நகரமையத்திலிருந்து 8கி.மீ. தூரத்திற்குள் நிரந்தரவசிப்பிடத்தைக் கொண்ட ஆண்கள்.)
11-02-2005 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வருகை தரவும்
ஆளணி முகாமையாளர், வலம்புரி

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.